திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2019, விலை ரூ.5/-


## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வருடாந்திர பிரம்மோத்ஸவம்

23-11-2019 முதல்
01-12-2019 வரை



திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
திகழும் அருக்கன் அணிநிறமும் கண்டேன்

- பேயாழ்வார்



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பொறுப்பாண்மைக்குழு

திருமலை திருப்பதி தேவஸ்தான புதிய பொறுப்பாண்மைக்குழுவிற்கு ஆ.மா. அரசு தலைவர், உறுப்பினர்கள், பதவி அடிப்படையில் உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களை நியமித்தது. இவர்களுக்கு திருமலை ஆலயத்தில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர், இணைச்செயலாட்சித்தலைவர், உயர் அதிகாரிகள் பதவிப்பிரமாணம் செய்வித்து ஸ்வாமி தீர்த்தப்பிரசாதங்களை வழங்கினர். வேதபண்டிதர்கள் ஆசிர்வதித்தனர்.



திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி
பொறுப்பாண்மைக்குழுத் தலைவர்



திரு. யு.வி.ரமணமூர்த்தி ராஜு
உறுப்பினர்



திரு. எம். வெங்கடமல்லிகார்ஜுன ரெட்டி
உறுப்பினர்



திரு. கெ. பார்த்தசாரதி
உறுப்பினர்



திரு. வெரிகேல முரளி கிருஷ்ணா
உறுப்பினர்



திரு. கிருஷ்ணமூர்த்தி வைத்தியநாதன்
உறுப்பினர்



திரு. நாராயணஸ்வாமி ஸ்ரீநிவாசன்
உறுப்பினர்



திரு. ஜெ.ராமேஸ்வர ராவ்
உறுப்பினர்



திருமதி வி. பிரசாந்தி
உறுப்பினர்



டாக்டர் பி.பார்த்தசாரதி ரெட்டி
உறுப்பினர்



டாக்டர் நிசிதா முப்பவரபு
உறுப்பினர்



திரு. நாதெள்ள சுப்பாராவ்
உறுப்பினர்



திரு. டி.பி. அனந்த
உறுப்பினர்



திரு. ராஜேஷ் சர்மா
உறுப்பினர்




திரு. ரமேஷ் செட்டி
உறுப்பினர்



திரு. குண்டாவரம் வேங்கடபாஸ்கரராவ்
உறுப்பினர்



திரு. மூரம்செட்டி ராமுலு
உறுப்பினர்



திரு. டி. தாமோதர் ராவ்
உறுப்பினர்



மேலும் சில உறுப்பினர்கள் விவரம் பக்கம் 55 ல் பார்க்க...



*அத்ர சூரா மஹேஷ்வாஸா*
*பீ$_4$மார்ஜுநஸமா யுதி$_4$ |*
*யுயுத$_4$ாநோ விராடச்ச*
*த்$_3$ருபத$_3$ச்ச மஹாரத$_2$: ||*

இந்தப் படையில் பெரிய பெரிய வில்லாளிகள்; யுத்தத்தில் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஈடான வீரர்கள்; ஸாத்யகியும் விராடனும், ராஜா துருபதனும் மகாரதிகளாக இருக்கிறார்கள்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–4*



*ஆவிர்ப்பாவ: கலச ஜலதாவத்வரே வாऽபி யஸ்யா:*
*ஸ்த்தாநம் யஸ்யா: ஸரஸிஜவநம் விஷ்ணுவக்ஷ: ஸ்த்தலம்வா |*
*பூமா யஸ்யா புவந மகிலம் தேவி திவ்யம் பதம் வா*
*ஸ்தோகப்ரஜ்ஞை ரநவதிகுணா ஸ்தூயஸே ஸா கதம்த்வம் ||*

பெரிய பிராட்டியே! எவளுடைய அவதாரம் திருப்பாற்கடலிலும் யாகசாலையிலுமோ, எவளுடைய இருப்பிடம் தாமரைக்காடும் எம்பெருமானுடைய திருமார்புமோ, எவளுடைய செல்வம் உலகம் முழுதும் ஸ்ரீவைகுண்டமுமோ எல்லையற்ற குணங்களையுடையவளான அத்தகைய நீ சிற்றறிவுடைய (என் போன்ற)வர்களால் எப்படி துதிக்கப்படுவாய்!

*- ஸ்ரீஸ்துதி*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் ஐப்பசி/கார்த்திகை மாதம் தக்ஷிணாயணம் ஸரத்ருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 நவம்பர் 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 15 | வெள்ளி | பஞ் | மூல | சுப நாள், மணவாளமாமுனிகள் சாத்துமுறை. |
| 2 | 16 | சனி | சஷ் | பூரா | கந்த சஷ்டி, சூர ஸம்ஹாரம், சேனைமுதலியார் திருநட்சத்திரம். |
| 3 | 17 | ஞாயிறு | சப் | உத்ரா | சுபநாள், பானு ஸப்தமி, திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம் அங்குரார்ப்பணம். |
| 4 | 18 | திங்கள் | அஷ் | திவோ | கோபாஷ்டமி, மாத துர்காஷ்டமி, குரு தனுசு பிரவேசம் விகா. 5ம.17நி. ச்ரவணம், திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாக மஹோத்ஸவம், பொய்கையாழ்வார் திருநட்சத்திரம், பிள்ளைலோகாசார்யார் திருநட்சத்திரம், வேதாந்த தேசிகர் சாத்துமுறை, அத்திரி மஹரிஷி திருநட்சத்திரம். |
| 5 | 19 | செவ் | நவ | அவி | அக்ஷய நவமி, விருத்தி திதி, திரிதினஸ் ப்ருக், தனிய நாள், பூதத்தாழ்வார் திருநட்சத்திரம். |
| 6 | 20 | புதன் | நவ | அவி | கரி நாள், புதன் மே.வ.அஸ்தமனம், பேயாழ்வார் திருநட்சத்திரம். |
| 7 | 21 | வியா | தச | கா | |
| 8 | 22 | வெள்ளி | ஏகா | பூரட் | சர்வ ஏகாதசி, ரஸாயன உரம் தயாரிக்க, நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 9 | 23 | சனி | துவா | உத்ரட் | சனித் திரயோதசி, பிரதோஷம். |
| 10 | 24 | ஞாயிறு | திர | ரேவ | சுப நாள். செவ்வாய் துலாம். |
| 11 | 25 | திங்கள் | சசி | அஸ் | வைகுண்ட / காரக சதுர்தசி, வ்ய-சிரா யுரேனஸ் வ.நி., நகரி ஸ்ரீகரியமாணிக்க ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 12 | 26 | செவ் | பௌர் | பர | கார்த்தீக பௌர்ணமி, சிவாலய அன்னாபிஷேகம், ஆகா.மா.வை., நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, நகரி ஸ்ரீகரிய மாணிக்க ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் அன்னாபிஷேகம். |
| 13 | 27 | புதன் | பிர | கார் | கிருத்திகை, கார்த்தீக பஹுள. |
| 14 | 28 | வியா | துவி | ரோகி | ..... |
| 15 | 29 | வெள்ளி | திரு | மிரு | சுப நாள். |
| 16 | 30 | சனி | சது | திரு | சங்கடஹர சதுர்த்தி, சூரியன் விருச்சிகம் இரவு.12ம.51நி., திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷ பில்வார்ச்சனை. |
| 17 | 1 | ஞாயிறு | பஞ் | புன | விஷ்ணுபதி புண்ணிய காலம் கரி நாள், புதன் கி.உதயம். |
| 18 | 2 | திங்கள் | சஷ் | பூச | சஷ்டி-கரி நாள். |
| 19 | 3 | செவ் | சப் | ஆயி | நாகதோஷ சாந்தி செய்ய, (ஆஸ்லேஷாபலி) |
| 20 | 4 | புதன் | அஷ் | மக | மஹாதேவாஷ்டமி, பைரவர் ஜயந்தி. |
| 21 | 5 | வியா | நவ | பூர | சுக்ரன் தனுசு வைத்-சிரா |
| 22 | 6 | வெள்ளி | தச | உத் | சுப நாள், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் லக்ஷ குங்குமார்ச்சனை, பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 23 | 7 | சனி | ஏகா/துவா | ஹஸ் | உத்தான ஏகாதசி, க்ஷய திதி, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 24 | 8 | ஞாயிறு | திர | சித் | தனிய நாள், பிரதோஷம், வாஸ்து ப.10.54-11.30., தன்வந்தரி ஜெயந்தி. |
| 25 | 9 | திங்கள் | சசி | சுவா | மாத சிவராத்ரி, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் கார்த்திகை சோமவார அபிஷேகம். |
| 26 | 10 | செவ் | அமா | விசா | சர்வ அமாவாசை கரி நாள். |
| 27 | 11 | புதன் | பிர | அனு | மார்கசிர சுத்த, நெப்ட்யூன் வ.நி., திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் யானை வாகனம். |
| 28 | 12 | வியா | துவி | கேட் | சந்த்ர தரிசனம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கருட வாகனம். |
| 29 | 13 | வெள்ளி | திரு | மூல | சுப நாள். |
| 30 | 14 | சனி | சது | பூரா | மாத சதுர்த்தி தனிய நாள், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் திருத்தேர். |




*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*பிரதான ஆசிரியர் :*
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*ஆசிரியர் :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
*அச்சிடுபவர் :*
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
*ஓவியம் :*
**திரு.** P.**சிவப்பிரஸாத் (தி.தி.தே.ஓய்வு)**
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
*தி.தி.தே. திருப்பதி.*
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

***பிரதிகளுக்கு:***
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| **தனிப்பிரதி** | **ரூ.5/-** |
| **வருடச்சந்தா** | **ரூ.60/-** |
| **ஆயுள் சந்தா** | **ரூ.500/-** |
| **அயல்நாட்டு வருடச்சந்தா** | **ரூ.850/-** |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்


மலர் 50 இதழ் 06

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| **ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்** *- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.* | 7 |
| **முதலாழ்வார்கள் உபதேசம்** *- திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்.* | 12 |
| **பிள்ளை லோகாசாரியர்** *- கவிமாமணி முனைவர் ம. நாராயணன், வேலூர்.* | 14 |
| **ஸ்வாமி தேசிகன் காட்டும் அகலிகை** *- திருமதி மைதிலி வேணுகோபால், கோயம்பத்தூர்.* | 16 |
| **ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் மன்னுபுகழ் மணவாள மாமுனிகள்** *- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 18 |
| **நமது திருக்கோயில் : வரலாற்றுப் புகழ் மிக்க திருச்சானூர் திருத்தலம்** *- திருமதி. வி. உஷா, திருப்பதி.* | 21 |
| **திவ்ய திருத்தலம்-திருமலை** *- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.* | 23 |
| **சிறார் வாக்கு : திருக்கார்த்திகை** *- செல்வன். அதுல், கேரளா.* | 26 |
| **பச்சை தோரணம் : திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவ வைபவம்** *- திருமதி ஏ. அருணா, திருப்பதி.* | 31 |
| **ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்-பிரியவிரதன் கதை** *- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 38 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** *- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 41 |
| **108 திவ்யதேச வைபவம் – திருக்கோவலூர்** *- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 44 |
| **பகவத் கீதை-இளைய சமுதாயம் மனதினை கட்டுப்படுத்துவதற்கான வழி** *- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.* | 47 |
| **ஆயுர்வேதம் – நல்உணவே மருந்து** *- திருமதி. பா. காயத்ரி, கேரளா.* | 49 |
| **2019, நவம்பர் மாத ராசி பலன்** *- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.* | 51 |

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.**
பின்னட்டை : **பஞ்சமி தீர்த்தம், திருச்சானூர்.**



# தாயார் திருஅவதாரத் திருநாள்

அழகான இந்த பூலோகத்தில் அலர்மேல் மங்கை அவதரித்த வரலாறு அற்புதமானது! ஆயிரம் இதழ்கள் கொண்ட தங்கத்தாமரையில் அத்தாயார் "பத்மாவதி தேவி" யாக அவதரித்தது சிறப்பாகும். இந்த அற்புத அவதாரத்தைக் குறித்து தெரிந்து கொள்ள வேண்டுமெனில் முதலில் திருவேங்கடமுடையான் "ஸ்ரீநிவாசனாக" எவ்வாறு ஆனார் என்பதனை தெரிந்து கொண்டாலே போதும்! அலர்மேல் மங்கை தாயார் அவதரித்த அற்புத வரலாறும் அறிய முடியும். மேலும் லோக கல்யாணத்திற்காக அத்தம்பதிகள் பூலோகத்திற்கு இறங்கி வந்த திவ்ய வரலாறும் அறிய முடியும்.

*"கலௌ வேங்கட நாயக!"* எனும் படியாக, பூலோக வைகுண்டமான திருமலைக்கு வந்த திருவேங்கட முடையான் "ஸ்ரீமகாலட்சுமி" இன்றி தாம் மட்டும் தனித்து பக்தர்களின் கோரிக்கைகளை பரிபூரணமாக நிறைவேற்ற முடியாது என்று எண்ணினார். மகாலட்சுமி கொலுவீற்றிருக்கக்கூடிய கொல்ஹாபுர திவ்ய திருத்தலத்திற்குச் சென்றார். அங்கு பனிரெண்டு வருடங்கள் அத்தாயாரின் தயைக்காக, தரிசனத்திற்காக திருமலைவாசன் பரிதவித்தார். அப்பொழுது அசரீரியின் கூற்றுப்படி ஸ்வர்ணமுகி நதிக்கரைக்கு வந்து, பத்ம சரோவரத்தை ஏற்படுத்தினார். அங்கு பனிரெண்டு ஆண்டுகள் மகாலட்சுமி தயைக்காக தவம் செய்தார்.

அப்போது கார்த்திகை, சுத்த பஞ்சமி திதி வெள்ளிக்கிழமையன்று, அபிஜித் லக்னத்தில், ஸ்ரீமகாலட்சுமி தாயார் பத்மசரோவரத் தின் புண்ணிய தீர்த்தத்தில் அழகுடன் பரவியிருந்த ஆயிரம் இதழ்கள் கொண்ட தங்கத்தாமரையில் அவதரித்தார். ஆச்சர்யமான தேஜஸ்ஸுடனும், அளவிட முடியாத ஆனந்தத்துடனும் அழகுமிகு அலங்காரத்துடனும் தங்கத்தாமரையில் அவதரித்த ஸ்ரீமகாலட்சுமியை பிரம்மாதி தேவதைகள் "பத்மாவதி தேவி" என்றழைத்தனர். தாமரையில் ஒளிவீசிக் கொண்டிருந்த அந்த திவ்ய ஒளியை ஆழ்வார்கள் "அலர்மேல்மங்கை" எனப் போற்றினர். உலக நன்மைக்காக தாயார் திருமலையப்பன் கழுத்தில் மாலை அணிவித்தார். ஆனந்த நிலையவாசன் அத்தாயாரை ஆலிங்கனம் செய்து, தன் இதயத்தில் "வியூக லட்சுமி"யாக பிரதிஷ்டை செய்து திருமலைக்குச் சென்றார்.

மேலும் பிரம்மாதிதேவதைகளின் வேண்டுகோளுக்கிணங்க, பத்மசரோவரத்தின் கரையில் "அலர்மேல் மங்கை" "பத்மாவதி" எனும் திருநாமத்தோடு ஸ்வாமியின்றி தனியாக "வீரலட்சுமி"யாக பூஜைகளை ஏற்றுக் கொண்டு வரங்களை அளிக்கின்றார். அன்று பிரம்மாதிதேவதைகள் "பத்மாவதி தாயாரு"க்கு நிர்வகித்த பிரம்மோத்ஸவம் இன்றும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. முக்கியமாக இவ்வுத்ஸவத்தின் இறுதி நாள் "பஞ்சமி தீர்த்தம்" அன்று திருவேங்கடமுடையான் சீர்வரிசையாக "புடவை ரவிக்கை, மஞ்சள், குங்குமம், ஆபரணங்கள், மாவால் செய்யப்பட்ட உணவுப் பிரசாதங்கள்" போன்றவற்றை யானை மீது அர்ச்சகர்கள் மூலம் தாயாருக்கு அனுப்புவது காலம் காலமாக நடக்கின்ற சம்பிரதாயமாகும்.

அலர்மேல் மங்கை தாயார் சாக்ஷாத் ஆனந்த நிலையானின் தயை ஸ்வரூபம்! அத்தாயே அனைத்து நேரங்களிலும், அனைத்து பிரதேசங்களிலும், அனைத்து இடங்களிலும் பக்தர்களால் ஆராதிக்கப்படுகிறார். பக்தர்களுக்காக திருவேங்கடமுடையானிடம் சிபாரிசு செய்கிறார். முதலில் பக்தர்களின் கோரிக்கைகளையும், பிரார்த்தனைகளையும் கேட்டுக் கொள்கிறார். தான் கேட்டவற்றை திருவேங்கடமுடையானிடம் கூறி, வரமளிக்கின்றார். அன்புடன் பக்தர்களின் குறைகளை போக்குகின்றார். திருமலையப்பனின் திருமார்பில் "வியூக லட்சுமி"யாக இருப்பவளே திருச்சானூரில் "பத்மாவதி தேவி", "அலர்மேல்மங்கை" எனும் பெயர்களில் அர்ச்சாமூர்த்தியாக கொலுவீற்று, சர்வலோகங்களையும் கட்டி காத்தருள்கின்றார்.

இத்துனை சிறப்பு குணங்களோடு ஒளி வீசுகின்ற அலர்மேல் மங்கை தாயார் அவதரித்த "பஞ்சமி தீர்த்தம்" பத்து நாட்களுக்கு முன்பாக துவங்கி, தினமும் திருமலையப்பன் பட்டத்து மகாராணியாக, சேஷ வாகனத்தில் "அனந்த லட்சுமி"யாக, ஹம்சத்தில் "சரஸ்வதி"யாக, கல்பவிருக்ஷத்தில் "காமிதார்த்த ப்ரதாயினி" யாக, யானை மீது "கஜ லட்சுமி" யாக, கருடன் மீது "வேங்கடாத்ரி லட்சுமி"யாக, அனுமன் மீது "சீதாலட்சுமி" யாக.... இப்படி பலவாகனங்களில் பல கோலங்களில் தரிசனமளிக்கும் அலர்மேல் மங்கை தாயாரை உத்ஸவ வேளையில் பக்தர்கள் அனைவரும் உற்சாகமாக பங்கு கொண்டு, கண்ணாரக்கண்டு கரங்களை உயர்த்தி வணங்கி, வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க பக்தர்களை அன்புடன் வரவேற்கின்றது எ(உ) "ஸப்தகிரி" மாத இதழ்!



# ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்

திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ண ஸ்வாமி, திருப்பதி.
- 9440120758

*"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்
மங்கை உறை மார்பா!
நிகரில் புகழாய், உலகம் மூன்றுடையாய்,
என்னையாள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே."*

ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம். இதில் முதல் வரியிலேயே தாயாருக்கு ஏற்றம் கொடுத்து ஸ்ரீஅலர்மேல் மங்கையை ஒரு கணமேனும் பிரியாமல் தனது திருமார்பில் வைத்திருக்கிறார் திருவேங்கடமுடையான் என்று போற்றுகிறார் ஆழ்வார்.

அந்த எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்து சுகபோகங்களையெல்லாம் விட்டுவிட்டு பூலோகத்துக்கு இறங்கி வந்து, வகுளாதேவியின் வளர்ப்பு மகன் ஸ்ரீநிவாசனாகியதும், பிராட்டி ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அம்சமாக, பத்மசரோவரத்தில் ஆவிர்பவித்து, ஆகாசராஜனின் திருமகளாக ஸ்ரீபத்மாவதி தேவியானதும், அவர்கள் இருவருக்கும் திருக்கல்யாணம் நிகழ்ந்ததும் நாமெல்லோரும் அறிந்த கதை தான். நாராயணவனம் திவ்ய க்ஷேத்திரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் மலர்மாரி பொழிய இந்த தெய்வதம்பதிகளின் பரிணயம் கோலாகலமாக நடைபெற்ற பின்னர், இருவரும் அகத்திய முனிவரின் வேண்டுகோளின்படி ஆறு மாத காலம் ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் சேர்ந்து தாம்பத்யம் நடத்திய பின்னர், கலியுகம் முடியும் வரை கலியுகத் தெய்வமாக ஸ்ரீநிவாஸப் பெருமான் திருமலையிலும், ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சானூரிலும் எழுந்தருளித் தங்களை நாடி வரும் பக்தர்களை ரக்ஷிப்பதாக சங்கல்பம் செய்து கொண்டார்களாம். இவ்வாறாக ஆதிதம்பதிகள் பிரிய வேண்டியதின் காரணத்தை நாம் சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும்.

தாயாரை எம்பெருமானுக்குப் புருஷகாரி என்பார்கள். இந்த புருஷகாரி என்பதின் பொருள் என்ன? புருஷனாக நடந்து கொள்ளாதவர்களைத் திருத்தி புருஷனாக்குவது என்பதாகும். ஒரு புருஷனாகப்பட்டவர்

ஓம் ப்ரக்ருத்யை நம:

பக்தர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பல்வேறு சேவைகள், விவரங்கள் குறித்து அறிய கீழ்காணும் இலவச எண்களில் தொடர்பு கொள்ளவும்.

**1800-425-4141 / 1800-425-111111**

உயர்ந்த லட்சியத்தை நோக்கி தைரியமாக முன்னே செல்ல வேண்டும். ஆனால் ஒரு ஜீவாத்மா எம்பெருமானைப் பக்தியுடன் அணுக முடியாதபடி அவனது பாபங்கள் அவனைத் தடுக்கின்றன. பிராட்டி பெற்ற தாயைப் போல தன்னுடைய உபதேசங்களாலும் அன்பினாலும் அவனைத் திருத்தி, அவனது பாபங்களைத் தனது திருவருளால் போக்கி எம்பெருமானை நெருங்க வைக்கிறாள். அதாவது ஜீவாத்மா என்கிற புருஷனை உண்மையான புருஷனாக, நல்ல தன்மையுடையவனாக ஆக்குகிறபடியால் தாயார் "புருஷகாரி" எனப்படுகிறார்.

*''லக்ஷ்மீ: புருஷகாரத்வே பரமர்ஷிபி:''* என்கிறது சாஸ்திரம். இவ்வாறாக பக்தர்களுக்கும், எம்பெருமானுக்குமிடையே ஒரு பாலமாக செயல்படுகிறாள் தாயார். இந்த உபகாரத்தைத் தான் ஸ்ரீபத்மாவதி தாயார் திருச்சானூரில் வீற்றிருந்து தன்னை வந்து வழிபடுகின்ற பக்தர்களுக்கும் செய்கிறாள். ஆகவேதான் எம்பெருமான் திருமலை யாத்திரைக்கு வருகின்ற பக்தர்களை "முதலில் திருச்சானூர் சென்று தாயாரைத் தரிசித்து விட்டுப் பின்பு திருமலை ஏறி என்னிடம் வாருங்கள். உங்களுக்குப் பரிபூரண பலன் கிட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இது அந்த ஆதி தம்பதிகளுக்கிடையே பக்தர்களுக்குத் திருவருள் புரிகின்ற விஷயத்தில் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கை என்று கூட சொல்லலாம்.

இந்த கலியுகத்திலோ பாபங்களுக்குக் குறைவே இல்லை. நம்மிடம் இருப்பது ஒரு பாபமூட்டை. இந்த மூட்டையை சுமந்து கொண்டு மலை ஏறும் சிரமத்தைக் கூட பக்தர்களுக்கு வைக்காமல், முதலில் அடிவாரத்தில் இருக்கும் திருச்சானூர் திவ்ய க்ஷேத்திரத்திற்குச் சென்று, ஸ்ரீபத்மாவதி தாயாரைத் தரிசித்து, பிரார்த்தித்துக் கொண்டு, அந்த பாப மூட்டையை இறக்கி வைத்து விட்டு, தாயாரின் திருவருளால் பரிசுத்தமாகி, *''போய பிழையும் புகுதருவான் நின்ற னவும் தீயினில் தூசாகும்''* என்று ஸ்ரீஆண்டாள் பிராட்டி அருளியிருப்பதுபோல, தூய்மையான மனதோடு திருமலையேறி திருவேங்கடத்து எம்பெருமானை சேவித்து வேண்டிய வரங்களைப் பெறுவது எளிதல்லவா! இந்த உபகாரத்தைத்தான் தாயாரும், எம்பெருமானும் தனித்தனியே இருந்து கொண்டு, பரம வாத்ஸல்யத்துடன் பக்தர்களாகிய நமக்கு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமல்ல, எம்பெருமானின் இன்னொரு கட்டளை என்ன தெரியுமா? திருமலையில் தனக்கு நடைபெறுகின்ற பூஜைகளும், உற்சவாதிகளும், திருச்சானூரில் தனியாட்சி செய்யும் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் பக்தி சிரத்தையுடன், வெகு விமரிசையாக நடைபெற செய்ய வேண்டும் என்பதே. அதன்படியே திருமலையில் திருவேங்கடநாதனுக்கு வருடாவருடம் புரட்டாசி மாதத்தில் கோலாகலமாக நடைபெறும் பிரம்மோத்ஸவத்தைப் போன்றே, கார்த்திகை மாதத்தில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் வருடாந்திர பிரம்மோத்ஸவம் ஆகம சாஸ்திரப்படி நடைபெறுகிறது.

துவஜாரோஹணம் எனப்படும் கொடியேற்றத்துடன் தொடங்கி, ஒன்பது நாட்களும், காலையும் இரவும் தாயார் விதவிதமான திருஅலங்காரங்களில், விதவிதமான வாகனங்களில் எழுந்தருளி திருச்சானூரின் மாட வீதிகளில் பவனி வந்து, தன்னைத் தரிசிக்க கூடியிருக்கும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறாள். இதற்கு சிகரம் வைத்தாற்போல் அமைகின்றது ஒன்பதாவது நாள் காலை பத்ம சரோவரத்தில் நடைபெறும் "பஞ்சமி தீர்த்தம்" என்கிற தீர்த்தவாரி. அனைத்து ஆலயங்களிலும் பிரம்மோத்ஸவத்தின் கடைசி நாளன்று தீர்த்தவாரி நடைபெறுவது வழக்கம் தானே. இதில் இந்த திருச்சானூரில் மட் டும் அப்படியென்ன விசேஷம்? என்கிற கேள்விக்கு விடையே இந்த கட்டுரை.



"ஸ்ரீ"யைப் பிரிந்து, பூலோகம் வந்த ஸ்ரீஹரியிடம், பன்னிரண்டு காலம் தவமிருந்து பொற்றாமரை மலர்களால் அர்ச்சித்தால் தாயார் மீண்டும் ஆவிர்பவிப்பாள் என்று



சொல்ல, அதன்படியே எம்பெருமான் தவமிருக்க, திருச்சானூரில் சூரிய நாராயணர் கோயிலுக்கு எதிர் திசையில் உள்ள பத்ம சரோவரத்தில் கார்த்திகை மாதம், சுக்ல பக்ஷ பஞ்சமியில், உத்திராட திருநக்ஷத்திரத்தில், பொற்றாமரைப் புஷ்பத்தின் மீது அவதாரமானாள் ஸ்ரீஅலர்மேல்மங்கை எனும் ஸ்ரீபத்மாவதி தாயார். அவள் ஆவிர்பவித்த சுப தினமே இந்த பஞ்சமி தீர்த்த நன்னாள். தாயாரின் பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாளும், தாயாரின் திருஅவதார தினமும் ஒன்றாக அமைவது என்பது விசேஷந்தானே. ஆகவே இந்த பஞ்சமி தீர்த்தத்தன்று, திருச்சானூருக்கு வந்து, அன்று தாயாருக்கும் சக்கரத்தாழ்வாருக்கும் நடைபெறுகின்ற விசேஷ திருமஞ்சனத்தைத் தரிசித்து, பின்பு "சக்ர ஸ்நானம்" நடைபெறும். புஷ்கரிணியில் நீராடினால் தாம் செய்த, செய்யப்போகின்ற அத்தனை பாபங்களும் தாயாரின் திருவருளால் தொலைந்து போகும் என்கிற நம்பிக்கையோடு, பாரத தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வெள்ளமென இந்த பத்மசரோவரத்தின் கரையில் கூடுகின்றனர்.

அன்று விடியற்காலை தாயார் திவ்ய அலங்காரத்துடன் வீதி உலா வந்த பின் கோயிலுக்குள் தாயாருக்கு "சூர்ணாபிஷேகம்" நடக்கும். இதில் ஆலய அதிகாரிகளும், பெரிய ஜீயர், சிறிய ஜீயர் ஸ்வாமிகளும், ஆசார்ய புருஷர்களும், அர்ச்சகர்களும் கலந்து கொள்வார்கள். அன்று இன்னொரு விசேஷம் என்னவென்றால் திருவேங்கடமுடையான் தனது தர்ம பத்தினியான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு பிறந்த நாள் சீராக, திருமலையிலிருந்து பட்டுப்புடவை, திவ்யாபரணங்கள், மஞ்சள் கொத்து எனப்படும் கிழங்கு மஞ்சள், குங்குமம், தாம்பூலம் இவற்றோடு லட்டு, வடை, அப்பம் போன்ற பிரசாதங்களை அனுப்பி வைக்கிறார். இவற்றைத் திருமலை திருப்பதி தேவஸ்தான ஆலய நிர்வாக அதிகாரிகளும், அர்ச்சகக் குழாமும் தங்கள் சிரமேற்தாங்கிக் கொண்டு கீழே இறங்கி வர, கீழ் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் கோயிலில் உள்ள அதிகாரிகள் மேள, தாளத்துடன் அவர்களை எதிர் கொண்டழைத்து கற்பூர ஆரத்தி காட்டி மரியாதை செய்கிறார்கள். அதன் பின்பு கோஷ்டியாக அலங்கரிக்கப் பட்ட யானைகள் முன்னே செல்ல, மேள வாத்தியங்களோடும், ஆடல், பாடல்களோடும் திருச்சானூருக்கு வருகிறார்கள். அங்கே திருச்சானூர் எல்லையில், படிமண்டபத்திற்கு அருகே, திருச்சானூர் கோயில் அதிகாரிகளும், பெரிய ஜீயர், சிறிய ஜீயர் ஸ்வாமிகளின் பிரபந்த கோஷ்டியும், வேத பாராயண பண்டிதர்களும் அவர்களை வரவேற்க, திருச்சானூரின் மாட வீதிகளில் பிரதக்ஷிணமாக வந்து, தாயாரின் திருக்கோயிலுக்குள் சென்று சமர்ப்பிக்கிறார்கள். தனது அருமை மணாளனின் சீர்வரிசைகளைப் பெருமிதத்துடன் ஏற்றுக் கொண்டபின், தாயார் பஞ்சமி தீர்த்தவாரிக்கு சக்கரத்தாழ்வாரோடு பத்மசரோவரத்துக்கு எழுந்தருளுகிறாள்.

அதன் பின்பு மங்கல வேளையில், ஸ்நபந திருமஞ்சனம் தொடங்குகிறது. ஒரு பக்கம் வேத பாராயணம். பஞ்ச ஸூக்தங்களான புருஷ ஸூக்தம், நாராயண ஸூக்தம், ஸ்ரீஸூக்தம், பூ ஸூக்தம், நீளா ஸூக்தம் ஆகியவற்றை வேத பண்டிதர்கள் பாராயணம் செய்து கொண்டிருக்க, மங்கள வாத்யங்கள் முழங்க, தேவஸ்தான அதிகாரிகளும், பக்தர் கூட்டமும் நிரம்பி வழிய, சீதளப் பொருட்களான பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள், சந்தனம்

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.
- திருமலை நடைபாதையில் நடந்துச் செல்லும் போது பக்தர்கள் குழுவாகச் செல்லவும்.

ஆகியவற்றால் தாயாருக்கும் சக்கரத்தாழ்வாருக்கும் ஒன்றாக அபிஷேகம் நடைபெறுகிறது. தூப, தீப, கற்பூர ஆரத்திக்குப் பின்னர் சுபமுஹுர்த்தத்தில் சங்கதாரை, பத்மதாரை வழியாக மங்கள நீரை ஸஹஸ்ர தாரையில் பொழிவித்து தாயாருக்குத் திருமஞ்சனம் செய்வித்த பின்பு, சக்கரத்தாழ்வாரைப் புஷ்கரிணிக்குள் எழுந்தருளப்பண்ணி, திருமுழுக் காட்டுகிறார்கள். பக்தர்கள் அனைவரும் "கோவிந்தா, கோவிந்தா" என்கிற ஸ்ரீகோஷத்துடன் தாயாரை மனதிலே நிலை நிறுத்திக் கொண்டு பத்ம சரோவர புஷ்கரணியில் நீராடுகிறார்கள். இந்த மெய்சிலிர்க்கும் அனுபவத்தை நாம் நேரில் அனுபவித்தால் மட்டும் தான் அதன் மகிமை நமக்குப் புரியும்.

*''கங்கேச யமுனேச கோதாவரீ, ஸரஸ்வதி, நர்மதே, சிந்து, காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரும்''* என்பதற்கேற்ப ஸப்த நதிகளும் அன்று தாயாரை தரிசிப்பதற்காக அந்த பத்மசரோவரில் கூடுவதாக ஐதீகம். ஆகவே பஞ்சமி தீர்த்த சுபதினத்தில் இந்த புஷ்கரிணியில் நீராடினால் அத்தனை தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியப்பலன் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. கிருத யுகத்தில் தபஸ் அதாவது தவம், திரேதா யுகத்தில் ஹோமம், யாகம், துவாபர யுகத்தில் தானம், தர்மம் ஆகியவற்றைச் செய்வதால் பாபங்கள் தொலையுமாம். ஆனால் இந்த கலியுகத்தில் நமது பாபங்கள் கழிய வேண்டுமானால் புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடுவதே எளிய வழி. அந்த வகையில் திருச்சானூரில், ஸ்ரீபத்மாவதிதாயாரின் பிரமோத்ஸவத்தின் இறுதி நாளான பஞ்சமி தீர்த்தத்தன்று பத்மசரோவரில் நீராடினால் நமது அத்தனை பாபங்களும் தொலையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

*''பத்மப்ரியே பத்மினி பத்மஹஸ்தே பத்மாலயே பத்ம தளாயதாக்ஷி |*
*விச்வப்ரியே விஷ்ணு: மனோனுகூலே த்வத்பாத பத்மம் மயி ஸன்னிதத்ஸ்வ ||''* –ஸ்ரீ ஸுக்தம்.



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 39

## இடமிருந்து வலம்

1. மகாவிஷ்ணு மிருகண்டு முனிவருக்கு சுயரூபம் காட்டிய தலம்....(7)
2. இராமானுஜர் கோவிந்தராஜ ஸ்வாமியை பிரதிஷ்டை செய்த தலம்.....(5)
4. பாண்டவர்கள் வனவாசத்தின் போது கன்னியாகுமரியில் இப்பகுதியில் தங்கியிருந்தனர்...(8)

14 ஏழுமலையானை தரிசிக்க ஏழு முறை வந்த விஜய நகர மன்னர்.....(9)


16. பாற்கடலைக் கடையும்போது தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாவிஷ்ணு இந்த அவதாரம் எடுத்தார்... (8)
17. நாள்தோறும் செய்யும் வழிபாட்டிற்கு ....(8) என்று பெயர் .
18. வில்வ மரத்தை தலமாகக் கொண்ட பெருமாள் கோயில்...(6)

## வலமிருந்து இடம்

10. மகாபாரதத்தை இயற்றியவர்....(6)
15. வழக்கமாக பெருமாள் கையில் வைத்திருப்பது....(10)
19. ஸ்ரீநிவாசப் பெருமானின் அவதார நட்சத்திரம்....(5)

## மேலிருந்து கீழ்

1. பஞ்சபாண்டவர்களால் புதுப்பிக்கப்பட்ட ஐந்து மகாவிஷ்ணு கோவில்களுல் ஒன்று...(7)
3. தருமர் புதுப்பித்து வழிபட்ட மகா விஷ்ணு கோவில்....(7)
4. தானான திருமேனியாக ராமானுஜர் அருள் புரியும் தலம்...(5)
5. ஏழுமலையானை மணந்த திருமகள்....(5)
6. கம்பர் தாமரை மலரை...(5) என்று குறிப்பிடுகிறார்.




தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.
8124930259

விடைக்கு 42 ம் பக்கம் பார்க்கவும்.

## கீழிருந்து மேல்

7. சூரிய அம்சமாக பிறந்த கொடைவள்ளல்....(4)
8. அரக்கர்களைக் கொல்ல விஷ்ணு இந்த ஆயுதத்தை பயன்படுத்துவார்....(6)
9. இந்த கண்ணாடியில் முகம் பார்த்து தன்னை அலங்கரித்துக் கொண்டாள் ஆண்டாள்...(4)
11. திருமால் குதிரை முகம் கொண்டவர் என்னும் பொருளில் .....(7) என பெயர் பெற்றார்.
12. முப்பெரும் தேவியின் வடிவம்....(5)
13. தேவலோகப் புல்....(4)
20. 24 மணி நேரமும் ஒரு பக்தர் தம்புராவை மீட்டிக் கொண்டு "ஹரே ராமா ஹரே கிருஷ்ணா" என்று நாம சங்கீர்த்தனம் செய்வதற்கு..... (7) என்று பெயர்.



# முதலாழ்வார்கள் உபதேசம்

திரு.எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர் - 9962788065

"எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை மட்டுமே மனத்தில் உறுதியாகக் கொள்வாயாக" என்று உபதேசம் செய்கிறார் முதலாழ்வாரான பொய்கையாழ்வார். அவர் அளித்த முதல் திருவந்தாதியில் இறுதியாக உள்ள மூன்று வார்த்தைகள் *"மாயவனையே மனத்து வை".* இவ்வாழ்வார் திருவாக்கிலிருந்து உதிர்ந்த மூன்று முத்துக்கள் முதல் திருவந்தாதியிலிருந்து கடைந்தெடுத்த வெண்ணெய் போல், திரண்டெழுந்த திரட்டிப்பால் போல் அமைந்துள்ள அமிர்தமோ? ஆராவமுதமோ? சரம சுலோகமோ? என்று நினைக்கத் தோன்றுகிறது. எம்பெருமான் திருவடிகள் ஒன்றே – ஒப்பற்ற அடைய வேண்டிய இடம் (ப்ராப்யம்). அவனையடைய அவனே உபாயம் (ப்ராபகம்). இந்த உறுதியான மனம் அல்லது மகாவிச்வாசம் வேண்டும் என்பது பொய்கையாழ்வாரின் உபதேசம். மாயவன் என்றால் ஆச்சர்யமான காரியங்களைச் செய்பவன் என்று பொருள். அந்த மாயவன் யார்? பிரம்மா, விஷ்ணு, பரமசிவன் – தெய்வங்களுக்குள் முதன்மையானவர்கள். இம்மூவருள்ளும் முதன்மையானவர் கடல் நீர் நிறத்தினனான கண்ணன். இவனே ஸ்ரீமந்நாராயணன். இவன் கருணை ஒன்றே நன்மையை விளைவிக்கும் என்று முதன்முதலில் தெள்ளத் தெளிவாகக் காட்டித் தந்த பெருமை பொய்கையாழ்வாரையே சேரும்.

*"முதலாவார் மூவரே அம்மூவருள்ளும்*
*முதலாவான் மூரிநீர் வண்ணன் - முதலாய*
*நல்லான் அருளல்லால் நாம நீர் வையகத்து*
*பல்லார் அருளும் பழுது"*

– முதல் திருவந்தாதி 15

ஓம் ஸர்வ பூதஹிதப்ரதாயை நம:

முழுமுதற் கடவுளான ஸ்ரீமந்நாராயணனே, ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்தான். கண்ணபிரானின் கருணையல்லாமல் மற்ற தெய்வங்களின் அருள், கருணை என்பதெல்லாம் குறையுள்ளது என்றும், பயனளிக்காது என்றும் உறுதியாகக் கூறுகிறார்.

எவ்வளவு குற்றங்கள் செய்தோமோ தெரியவில்லை. பாபங்கள் செய்திருப்பதால் தானே பிறப்புப் பிணி, பிறப்பென்னும் நோய் ஏற்படுகிறது. பாவமே செய்து பாவியான நம்மை பகவான் ஏற்பானா? அவன் திருவடிகளையடைவது சுலபமா? சந்தேகங்கள் நம் மனத்தில் எழுவது சகஜம். இந்த சந்தேகங்களை நீக்குகிறார் பொய்கையாழ்வார். இன்று முதலாக எம்பெருமானை நினைத்திரு. அவன் திருநாமங்களைச் சொல். ஒரு முழுமையான ஈடுபாடு இல்லாமல், உள்ளூர இல்லாமல், மேலுக்குச் சொல்கிற வார்த்தையாகக் கூட இருக்கலாம். எம்பெருமான் விஷயமாகப் பேசினால் போதும். அன்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கபடத்துடன் பகவானை நினைத்தாலும் தகும். இக்குணங்களை ஏற்பான் பகவான். மலை போல் குவிந்துள்ள குற்றங்களை மன்னித்து நம்மை ஆட்கொள்வான். இப்படி நம்மை தைரியமூட்டுகிறார் பொய்கையாழ்வார்.

*''குன்றனைய குற்றஞ் செய்யினும் குணம் கொள்ளும்*
*இன்று முதலாக என் நெஞ்சே! - என்றும்*
*புறனுரையேயாயினும் பொன்னாழிக் கையான்*
*திறனுரையே சிந்தித்திரு''*

– முதல் திருவந்தாதி 41

இதைவிட ஆறுதலான உபதேசம் யாரால் செய்ய முடியும்? பகவன் நாம சங்கீர்த்தனத்தின் மகிமையை நமக்கு உணர்த்துவதையே தம் குறிக்கோளாகக் கொண்டவர் இரண்டாவது ஆழ்வாரான பூதத்தாழ்வார். மாதவ என்னும் திருநாமமே சகல வேதங்களின் கடைந்தெடுத்த சாரம் என்று பறைசாற்றுகிறார். வேதம் கற்றுக்கொள்ள முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். சகல வேத, வேதாந்த விழுப்பொருளை, வேதத்தின் சுருக்கமான, வேதத்தின் சாரத்தை நமக்குச் சொல்லிக் கொடுத்த பெருமை பூதத்தாழ்வாரையே சேரும்.

*''ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே, உத்தமன் பேர்*
*ஏத்தும் திறமறிமின் ஏழைகாள்! ஓத்ததனை*
*வல்லீரேல் நன்று, அதனை மாட்டீரேல், மாதவன் பேர்*
*சொல்லுவதே ஓத்தின் சுருக்கு''*

–இரண்டாம் திருவந்தாதி 39

மாதவா என்று சொல்ல சாஸ்திர ஞானம் எதுவும் வேண்டாம். ஆர்வம் ஒன்றிருந்தால் போதுமானது. மாதவன், மலர்மகள் கேள்வன், மலர்மங்கை மணாளன், ஸ்ரீய: பதி, திருமால் என்றெல்லாம் பகவானை அழைக்கிறோம். மாதவன் என்றால் மஹாலக்ஷ்மியின் நாதன் என்றும் கூறலாம். வித்தைகளுக்கு அதிபதி என்றும், முனிவர்களுக்கு ஜோதிமயமாய்த் தோன்றுபவர் என்றும் பொருள் கூறலாம்.

*''அகலகில்லேன் இறையும் என்று''* மலர்மகள் மஹாலக்ஷ்மி திருமாலின் இதய கமலத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கிறாள். ஆகவே "மாதவன்", "மாதுவாழ் மார்பினன்" என்றெல்லாம் பகவானை அழைக்கிறோம். *''ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன் தன் திருநாமங்கள்''* சொல்ல நம்மை அழைக்கிறார். *''வழு வின்றி நாரணன் தன் நாமங்கள் நன்குணர்ந்து நன் கேத்த''* நம்மை அழைக்கிறார். *''ஆர்வம் செறிந்த மனத்தராய் செவ்வே அறிந்து அவன் தன் பேர் ஓதி ஏத்துமவர்களே பெருந்தவத்தோர்''* என்கிறார். *''அறம் தாங்கும் மாதவனே என்னும் மனம் படைத்து மற்றும் அவன் பேர் நாவினால் ஓது''* வதையே எண்ணியிரு என்கிறார்.

பகவான் எங்குள்ளான்? என்ற கேள்விக்குப் பதில் கூறுகிறார் மூன்றாவது ஆழ்வாரான பேயாழ்வார். அந்தர்யாமியாய் *''மனத்துள்ளான்''* (மூன்றாம் திருவந்தாதி–3) என்கிறார். *''கழல் தொழுதும் வா நெஞ்சே!''* (மூன்றாம் திருவந்தாதி–7) அற்புதமான கிடைத்தற்கரிய பகவான் திருவடிகளைத் தொழ தன் மனத்தை எழுப்புகிறார். *''நாமம் பல சொல்லி நாராயணாவென்று நாம் அங்கையால் தொழுதும் நன்னெஞ்சே வா''* (மூன்றாம் திருவந்தாதி–8) என்று மனத்தை அழைக்கிறார். திருப்பாற்கடலை விட்டு விட்டு என் மனமாகிய மெத்தையில் படுத்துக்கிடக்கிறான். *''அடியேன் மனந்தனணைக் கிடக்கும் வந்து''* (மூன்றாம் திருவந்தாதி –15) என்று பாடுகிறார். பூமியாய், எட்டுத் திசைகளுமாய், வேதமாய், வேதம் ஓதும் பொருளாய், நிலவு ஊர்ந்துலவும் வானமாய், அருவிகளாய், நீர் வளம், நில வளம் உடைய திருவேங்கடத்தான் *''உள்ளத்தின் உள்ளே உளன்''* (மூன்றாம் திருவந்தாதி–39)என்கிறார். யார் உள்ளத்தில் உளன் என்ற கேள்வியை எழுப்பி, அதற்குப் பதிலையும் கூறுகிறார்.

*''உளன் கண்டாய் நல்நெஞ்சே! உத்தம னென்றும்*
*உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன்*
*கண்டாய்''*


– மூன்றாம் திருவந்தாதி 40

அவனை உள்ளத்தில் கொண்டு உருகும் மனத்தையுடைய பகவத் அடியார்களின் உள்ளத்தில் எங்கும் என்றும் நிறைந்திருப்பான் என்று உபதேசம் செய்கிறார். பகவானை ஓயாது நினைந்து, அவரவர் உள்ளக் கோயிலில் எழுந்தருளப் பண்ணி, வணங்கி மனமுருகி, பரவசமடைந்து, வேதமுதல்வனைப்பாடி எழுந்தும் பறந்தும் துள்ளுபவர்கள் மனத்தில், ஆர்வம் பெருகிக் குனிப்பவர்கள் மனத்தில், அவன் நாமமே பிதற்றுபவர்கள் மனத்தில் குடியிருப்பான் என்கிறார். பகவான் நம் மனத்தில் அந்தர்யாமியாய் வாழ்கிறான் என்பதை அறியும் பக்குவம் – மனத்தெளிவு எப்போது வரும்? இது சாத்தியமா? என்ற கேள்விக்கும் பதில் கூறுகிறார் பேயாழ்வார்.

*''முயன்று தொழு நெஞ்சே!''* (மூன்றாம் திருவந்தாதி 53)என்று பாடுகிறார். முயற்சி ஒன்றே ஆர்வத்தையும், தன்நம்பிக்கையையும், மகாவிச்வாசத்தையும் கொடுக்கும். மாயவனை மனத்தில் வைத்து, மாதவன் பேரோதி, உள்ளத்தினுள் உள்ளவனை உணர்ந்து வாழ்வோம்.

# பிள்ளை லோகாசாரியர்

கவிமாமணி முனைவர் ம. நாராயணன், வேலூர் 0416-2254424



சங்கக்காலந்தொட்டே திருமால் வழிபாடு தமிழ் நாட்டில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. பரிபாடல் போன்ற இலக் கியங்களும், நாலாயிர திவ்விய பிரபந்தம், அஷ்டப் பிரபந்தம் போன்ற அருந்தமிழ்ப் பக்திப்பனுவல்களும் இவ்வுண்மைக்குச் சான்றுகளாகும். அவ்வப்பொழுது பெரிய வாச்சான்பிள்ளை, வேதாந்த தேசிகர், நயினாராசாரியர், பிள்ளைலோகாசாரியர் போன்ற வைணவ ஞானிகளும் தோன்றி வைணவம் வாழவும் வளரவும் தொண்டாற்றி யுள்ளனர். இவர்களுள் பிள்ளை லோகாசாரி யரின் வாழ்வும் தொண்டும் பற்றி இங்குக் காண்போம்.

பிள்ளைலோகாசாரியரின் காலம் கி.பி. 1264–1369 என்பர் வைணவ அறிஞர். ஏறத்தாழ 105 ஆண்டுகள் இவர் வாழ்ந்திருக்கின்றார். இவரது தந்தையார் வடக்குத் திருவீதிப்பிள்ளை. மூத்த மகனான இவருக்குத் தந்தையார் தம் ஆசிரியரான நம்பிள்ளையின் பெயர்களுள் ஒன்றான உலகாரியன் எனும் பெயரைச் சூட்டினார். புகழ் பெற்ற வைணவ ஆசாரியர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், பிள்ளை லோகாசாரியரின் தம்பியாவார். தென்னாட் டில் முடும்பை என்னும் ஊரில் ஐப்பசி திருவோணத்தில் பிறந்த பிள்ளைலோகாசாரியார் வடமொழி, தமிழ் இரண்டிலும் புலமை பெற்றிருந்தார். திருமாலுக்குரிய திருவோண நாளில் பிறந்தமையாலும், வைணவ சமய ஞானப் பெருக்கத்தாலும் இவரைத் திருமாலின் அம்சம் என்றே ஆன்றோர் மொழிவர். இவர் திருவரங்கத்தில் வாழ்ந்தார். விளாஞ்சோலைப் பிள்ளை, திருவாய் மொழிப் பிள்ளை, கூர குலோத்தமதாசர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், கோயில் அண்ணன் போன்ற ஞானிகளைச் சீடர் களாகப் பெற்றிருந்தார். பெண்களும் பேதையரும் உய்ய வேண்டும் என்ற பெருநோக்கத்தோடு இவர் "அட்டாதச ரகசியங்கள்" எனும் 18 சாத்திரங்களை மணிப்பிரவாள நடையில் மிகவும் அழகாக எழுதியிருக்கின்றார்.

**அப்பதினெட்டு நூல்களாவன:**

1) முமுக்ஷுப்படி : இந்நூல் மந்திரப் பகுதி, துவயப் பகுதி, சரம சுலோகப் பகுதி எனும் மூன்று பிரிவுகளையுடையது. மோட்சத்தில் இச்சையுடையவன் முமுக்ஷு: அவன் அறிய வேண்டிய ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் எனும் மூன்று இரகசியங்களை இந்நூல் விளக்குகின்றது. 2) தத்துவத்ரயம் : சித் – அசித் – ஈசுவரன் என்ற தத்துவங்கள் மூன்றையும் இந்நூல் விளக்குகின்றது. 3) அர்த்த பஞ்சகம் : இந்நூல் சுயசொரூபம் (உயிரின் இயல்பு – தன் நிலை), பரசொரூபம் (இறைவன் நிலை), விரோதி சொரூபம் (உயிர் இறைவனை அடைய விடாமல் தடுக்கும் வினையின் இயல்பு), புருஷார்த்த ரூபம் (புருஷனால் வேண்டப்படும் பேற்றின் நிலை), உபாய சொரூபம் (பேற்றிற்கானத் தடையை நீக்கி இறைவனை அடைதற்குரிய உபாயத்தின் நிலை) ஆகியவற்றை விளக்குகின்றது.

4) ஸ்ரீவசன பூஷணம் : இந்நூல் தென்கலை வைணவ ஆசாரிய சம்பிரதாயங்களை மிகத் தெளிவாக விளக்கி உரைக்கும், இதன் சிறப்பை மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் ஏழு பாடல்களில் போற்றுகின்றார். 5) அர்ச்சிராதி : அக்னியை ஆதியாக உடைய வழி என்று பொருள். சேதனன் (அதாவது ஆன்மா அல்லது உயிர்) பிறவியிலிருந்து பரமபதம் அடைந்து வைகுந்த நாதன் தாளில் சேர்ந்து பல்லாண்டு பாடி இன்புற்றிருப்பது வரை கூறும்.

6) பிரமேய சேகரம் : ஆன்மா உலக வாழ்க்கையை அனுப வித்துப் பிறகு திவ்விய நகரம் சேர்ந்து சர்வேசுவரனைத் தரிசித்து

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

எல்லாக் கைங்கரியமும் பண்ணுதலைக் கூறும். 7) பிரபந்த பரித்ராணம் : சர்வேசுவரனைத் தவிர வேறு ரட்சகர் இல்லை என்று அறிந்து நம் செயல்களுக்கு நாம் பொறுப்பல்ல என்றிருந்து ஈசுவரன் பக்கம் பாரத்தைப் போட்டிருத்தல்.

8) சார சங்கிரகம் : "த்வயம்" என்ற இரு தொடர்களிலுள்ள பத்து அர்த்தங்களைக் கூறுவது. 9)சம்சார சாம்ராஜ்யம், 10) நவரத்தின மாலை : சரணாகதன் செய்யத்தக்க ஒன்பது நினைவுகள். 11) நவவித சம்பந்தம், 12) யாத்ருச்சிகப்படி 13) பரந்தபடி, 14) ஸ்ரீயப்பதிப்படி, 15) தத்துவசேகரம், 16)தனித்வயம், 17) தனிச்சரமம், 18) தனிப்ரணவம்.

இவையேயன்றி தத்துவ விவேகம், நாலு வார்த்தை என்பனவும் இவர் இயற்றினார். இவருடைய சிறப்பான சில நூல்களுக்கு மணவாள மாமுனிகளே விளக்கவுரை வரைந்திருப்பது இவர் நூல்களின் உயர்வினைக் காட்டும்.

இவர், சாதியினால் உயர்வு தாழ்வு இல்லை, ஞானத்தினாலும் பக்தியாலும் உயர்வு தாழ்வு ஏற்படுகின்றது எனும் கொள்கை உடையவர். ஆசாரிய–பாகவத கைங்கரியங்கள் நிச்சயம் வைகுந்தம் தரும் என்பது இவர் கருத்து. இவரை புகழ்ந்து வாழித்திருநாமம் முதலிய பல பாடல்கள் பாடபப்பட்டுள்ளன. சான்றுக்கு இரு வெண்பாக்கள் :

*"வாழியுல காசிரியன் வாழியவன் மன்னுகுலம்*
*வாழி முடும்பை எனும் மாநகரம் - வாழி*
*மனஞ்சூழ்ந்த பேரின்பம் மல்குமிகு நல்லார்*
*இனஞ் சூழ்ந் திருக்கும் இருப்பு".*

*"ஆரணநூல் வாழ்க அருளிச் செயல் வாழ்க*
*தாரணியும் விண்ணுலகும் தான் வாழ்க - பூரணமாய்*
*பின்னுமுள்ளோர் தாம்வாழ்க பிள்ளை உலகாசிரியனே*
*இன்னிமொரு நூற்றாண்டிரும்".*

இவர் வேதாந்த தேசிகரின் சமகாலத்தவர் என்பர். இருவரும் பரமபதம் அடைந்த காலம் சம்பிரதாயப்படி 1369. "வாழித் திருநாமம்" இவரை இவ்வாறு போற்றிப் பாராட்டுகின்றது.

*"அத்திரிகிரி அருளாளன் அனுமதியோன் வாழியே*
*ஐப்பசியில் திருவோணத் தவதரித்தான் வாழியே*
*முத்திநெறி மறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே*
*மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே*
*நித்தியம்நம் பிள்ளைபதம் நெஞ்சில் வைப்போன் வாழியே*
*நீள்வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே*
*உத்தமமா முடும்பை நகர் உதித்த வள்ளல் வாழியே*
*உலகாசி ரியன்பதங்கள் ஊழிதோறும் வாழியே...!"*

இன்றைய இளைய தலைமுறையினருக்கு வைணவத்தின் அருமைகள் தெரிய–பெருமைகள் புரிய இவர் போன்ற வைணவ ஆசாரியர்களின் வாழ்வும் தொண்டும் உரிய முறையில் அறிமுகப் படுத்தப் பெறல் வேண்டும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**வாசகர்களுக்கு அறிவிப்பு!!**

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**


தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்

# ஸ்வாமி தேசிகன் காட்டும் அகலிகை



தண்டகாரண்யத்தில் அன்று, ஒரே ஆரவாரம். ரிஷிகளின் மந்திர உச்சாடனத்தைத் தவிர, வேறு எந்த சப்தமும், பொதுவாக இருக்காது.

ஆனால், அன்றோ மரங்களிலிருந்த கிளிகள் "கீச் கீச்" என்று சந்தோஷமாகவும், வியப்பைத் தெரிவிக்கும் வகையிலும் இணைந்து சப்தித்துக் கொண்டு, அங்குமிங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தன. விஷயம் வேறொன்றுமில்லை. ஸ்ரீராமன் தன் திருவடிகளின் தூசியினாலே அகலிகைக்கு சாப விமோசனம் அளித்ததை, அங்குள்ள ரிஷிகள், ஆச்சர்யமாக பேசிக் களித்துக் கொண்டிருந்தனர்.

ஒன்றுமில்லாமலேயே பேசும் கிளிகளுக்கு, அன்று ஒரு நல்ல விஷயமும் கிடைத்து விட்டது. "ஏய்! ஸ்ரீராமன் என்ன செய்தார் தெரியுமா? ஒரு பாறாங்கல் கிடக்குமே, அதன் மீது ஸ்ரீராமனின் பாதம் படக் கூடவில்லை. வெறும் தூசிதான் பட்டது. உடனே, பாறையிலிருந்து ஒரு அழகிய பெண் ஆவிர்பவித்து விட்டாள். என்ன ஆச்சரியம்!"

"அது யார் தெரியுமா?". அது தான் அகலிகை. நம்ம கௌதம முனிவருடைய திருத்தேவியார் தான். உயிர் பெற்று எழுந்து விட்டாள். அகலிகை எழுந்து விட்டதைக் கேட்டு, கௌதமரும் ஓடோடி வந்தார்.

"அப்புறம்". அந்த தம்பதிகளை ஸ்ரீராமனும், லக்ஷ்மணனும் சேவித்தனர். *''சீக்ர மேவ விவாஹ ப்ராப்திரஸ்து''* என்று ஆசிர்வதித்தார்கள்.

அகலிகை – கௌதமரை சேர்த்து வைத்த புண்ணியம், ஸ்ரீராமனுக்கே வெகு விரைவில் திருமணம் நடந்தேறியது.

*''பாந்து வ: பத்ம நாபஸ்ய பாதுகா*
*கேளிவாம் ஸவ: |''*
*அஹல்யா தேஹ நிர்மாண*
*பர்யாய பரமாணவ:||''*

ஸ்ரீராமனின் பாத தூளிகள், அகலிகைக்கு உயர்ந்த சரீரத்தை உண்டு பண்ணின. நமக்கும் அதுபோல எம்பெருமான் தம் பதியரின் கைங்கர்யத்துக்கு உகந்த திவ்ய சரீரத்தை அருள வேண்டும் என நமக்கும் சேர்த்து வேண்டுகோளை வைக்கிறார்.

அகலிகையின் தேகம் எப்படி புனிதத் தன்மையை அடைந்ததோ, அந்த மாதிரியான ஒரு திவ்ய தேகத்தை எங்களுக்கும் கொடுத்தால், நாங்களும் அநந்ய ப்ரயோஜநர்களாய், அநந்ய சேஷிகளாய், எம்பெருமானாகிய உமக்கு கைங்கர்யங்கள் புரிவோம் என்கிறார். எம்பெருமானின் பாத தூளியே நமக்கு அநந்ய சேஷத்வத்தையும், அநந்ய ப்ரயோஜநத்வத்தையும் அருளி விடும். நாம் மெனக்கெடவே வேண்டாம்.

கௌதமர் அகலிகையை ஏற்றுக் கொண்டது போலவே, மற்ற ரிஷிகளும், ஞானியர்களும், மகான்களுமே, அவளை, வெகு பரிசுத்தமானவளாக ஏற்றுக் கொண்டு விட்டனர். இப்படித்தான், எம்பெருமான், தங்கத்தைப் புடம் போடுவதுபோல நம்மைப் புடம் போடுகிறான். சிற்சில துன்பங்களை நாம் ஏற்றுக் கொண்டு, பின்னால் அவன் அநுக்ரகம் செய்யப் போகிறான் என்று புரிந்து கொண்டு, பொறுமையாக இருக்க வேண்டும் என ஸ்வாமி சமத்காரமாகச் சொல்கிறார்.

**திருமதி மைதிலி வேணுகோபால், கோயம்பத்தூர்**



ஓம் பரமாத்மிகாயை நம:



**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்**

*ஸத் ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்*
*நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்।*
*நிர்மோஹத்வே நிச்சலதத்வம்*
*நிச்சலதத்வே ஜீவன் முக்தி:॥*

**"ஆதி சங்கர பகவத் பாதர், நல்லோர் சேர்க்கையின் மூலம் எவ்வாறு "ஜீவன் முக்தி" என்ற நிலையை அடைவோம் என்பதை படிப்படியாக தொடராக விளக்குகிறார். நல்லோரின் சேர்க்கை ஏற்பட்டு விட்டால், பற்றற்ற நிலை ஏற்பட வழி கிடைக்கும். பற்றற்ற நிலையில் படிப்படியாக, அனுபவிக்கப் படும் உலக வாழ்க்கை அம்சங்களிலும் நாம் கொண்டுள்ள மோகம் (கவர்ச்சி) குறைந்து விடும். மோகம் நீங்கிய நிலையில்... இறுதியில் நிலைத்து இருக்கும் உண்மைப் பொருள் மட்டும் உணரப்படும் நிலை தோன்றும். இவ்வாறாக உலகாயுத உண்மை இதுதான் என்று உணரும் நிலையில்... ஜீவன் முக்தி எனப்படும் நிலைதனை (அனுபவத்தினை) அடைவோம்... என்று விளக்குகிறார்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

*"புநருபஜநிசங்காவாரகம் பாதுகே தத்*
*ப்ரசமயதி ரஜஸ்தே ராகயோகம் பாஜாநாம்"*

அகலிகைக்கு மறுபடியும் பிறப்பைக் கொடுக்கக் கூடிய கெட்ட விஷயங்களில் ஆசையை அறவே போக்கடித்து விட்டது. இனி, அவளுக்கு பிறப்பே இல்லை. எல்லா ஆசைகளையும் துறந்த பெண்ணாகக் காட்டுகிறார் ஸ்வாமி. மறுபடியும் பிறப்பு உண்டோ என்ற ஐயமும், பயமும் அறவே அற்றுப்போய்விட்ட, ஒரு உயர்ந்த பெண்ணாகக் காட்டுகிறார். எல்லோருடைய மனமும் இந்த அதிசய விஷயத்திலேயே லயித்து விட்டதாம். இவ்வளவு நெடுங்காலமாக, கல்லாய் கிடந்த அகலிகை வெறும் கல்லாக இல்லாமல், ஸ்ரீராம நாமத்தையே ஜெபித்துக் கொண்டு இருந்தாள்.

கையாலே தான் அபய முத்திரை காட்டுவான். அபயம் தருவான். ஆனால் ராமனோ, தன் காலாலே – தன் திருவடிகளாலே அபயமளித்து விட்டான். விஸ்வாமித்ரரோ பிரமித்துப் போய் பேச்சற்று நின்று விட்டாராம். என்ன ஸ்வாமி? இது யார்? என்று ராமன் கேட்க, சுதாரித்துக் கொண்ட விஸ்வாமித்ரர் அகலிகை விருத்தாந்தத்தைக் கூறுகிறார். "ஸ்ரீபாத சாரியாய் இந்த அரண்யத்திலே சஞ்சரித்து, இப்படி ஒரு சாப விமோசனம் கொடுத்து விட்ட பின், இந்த பூமியிலே இருக்கிறவர்களுக்கு, இனிமேல் துக்கம் ஏது ராமா? சம்ஸாரந்தான் ஏது? இந்த வனவாசத்திலும் நீ நிறைய சாதிக்கப் போகிறாய்! மறுபடியும் ராஜ்ஜியம் சென்ற பின்னும் நிறைய சாதிக்கப் போகிறாய்? என்றார். அகலிகை, கௌதமரை சேவித்து விடை பெற்றுக் கொள்கின்றனர். ரிஷிகளும், ரிஷி பத்னிகளும் ஸ்ரீராமனை போற்றுகிறார்கள்.

*"ஸீதா தாரா அஹல்யா மண்டோதரி, த்ரௌபதி*
*பஞ்ச கன்யா ஸ்மரே நித்யம் ஸர்வ பாப விநாசனம்"*

என்று ஐந்து உத்தம ஸ்தீரி ரத்னங்களில், ஒருத்தியாக அகலிகை இன்றும் கொண்டாடப்படுகிறாள். அகலிகைக்கும், ஸ்ரீராமனுக்கும் அவன் பாத தூளிக்கும், ஸ்வாமி தேசிகனுக்கும் நாமும் மங்களாசாசனம் செய்வோம்!

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. ஸ்வாமி தேசிகன் திருமலை வேங்கடவனுக்கு அருளிச் செய்த ஸ்தோத்திரம் எது?
2. ஸப்த காதையை இயற்றியவர் யார்?
3. திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வியாக்யானம் எழுதியவர் யார்?
4. கூரத்தாழ்வான் திருக்குமாரர்கள் யார்?
5. திருமங்கையாழ்வாரால் 100 பாசுரங்களுக்கும் அதிகமாக பாடப்பட்ட திவ்ய தேசங்கள் எது?
6. ஸ்வாமி தேசிகனுடைய ஆசார்யர் யார்?
7. மணவாள மாமுனிகளின் ஆசார்யர் யார்?
8. தேசிக நூற்றந்தாதியை இயற்றியவர் யார்?
9. ஸ்வாமி தேசிகன் காத்து கொடுத்த மிகப் பெரிய கிரந்த நூல் எது?
10. ஸ்வாமி தேசிகனின் குமாரர் யார்?

விடைகளுக்கு 46ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : ஜெ. நந்தகோபால், அரும்பாக்கம்.

தென்கலை சம்பிரதாயத்தில் ஆசார்ய வைபவ மானது எம்பெருமானான ஸ்ரீரங்கநாதனிடம் ஆரம்பித்து, அவரிடமே நிறைவு பெறுகிறது. அந்த நிறைவினைச் செய்து வைக்கும் பேறு பெற்ற ஆசாரியப் பெருமகனார் ஸ்ரீமந் மணவாள மாமுனிகள்! இவருடைய பெருமையைக் கூறும் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்கிற தனியனைப்பாடியே தினசரி வழிபாடு தொடங்குகிறது.

*"அடியார்கள் வாழ! அரங்கநகர் வாழ!*
*சடகோபன் தண்டமிழ் நூல் வாழ!*
*கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ!*
*மணவாள மாமுனிகளே இன்னுமொரு*
*நூற்றாண்டிரும்"*

என்று இவருக்குப் பல்லாண்டு பாடியே தென்கலை வழிபாடு நிறைவு பெறுகிறது.

எம்பெருமான் இட்ட பணியை எம்பெருமானார் செய்தார். அந்த எம்பெருமானார் செய்த பணியைச் சுவாமி மணவாள மாமுனிகள் தொடர்ந்து செய்து சிறப்புப் பெற்றார். வைணவத்தில்–குறிப்பாக தென்னாசாரிய மர பில் கொண்டாடப்படும் ஸ்ரீமந் மணவாள மாமுனிகளை திருவாய்மொழி அர்த்தத்தை காத்த குணவாளர் என்று வைணவ உலகம் கொண்டாடுகிறது. ஒரு வருட காலத்தின் உத்ஸவாதிகளையெல்லாம் நிறுத்தி விட்டு மணவாள மாமுனிகளின் அமுதத் திருவாக்காம் திருவாய்மொழிப் பேருரையைத் திரு வரங்கன் கேட்டான் என்பது வரலாறு.


வைணவ தென்கலை மரபின் நிறைவு நிலை ஆசா ரியரான மாமுனிகளின் பெருமைகளையும் அரு ளிச் செயல்களையும் அவ் வளவு எளிதாக சொல்லி விட முடியாது.

சுவாமி இராமானுஜரின் மறுஅவதாரம் என்றே வைணவர் களால் கொண்டாடப்படுகின்ற இவ ரின் ஆணைப்படியே திருமலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கட முடையான் மீது வடமொழியில் ஸ்ரீவெங்கடேச சுப்ரபாதம் எனும் திருப்பள்ளியெழுச்சியை பிரதி வாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி இயற்றினார். அது இன்றளவும் தினமும் நடைதிறக்கும் போது பாடப்பட்டு வருகிறது. இனி இவரின் அவதார வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரியிலே திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரை யருக்கும் ஸ்ரீரங்க நாச்சியார் தம்பதிக்கும் ஆதிசேஷன் அம்சமாக சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் திருமூல நட்சத்திரத்தில் (24.10.1370) அவதரித்தார். அவருக்குப் பெற்றோர் வைத்த திருநாமம் அழகிய மணவாளப் பெருமாள்.

தம் தந்தையாரிடமே துவக்க நிலையில் வேத வேதாந்தங்களைப் பயின்றார். பின் அவர் தம் ஆசாரிய ராகத் திகழ்ந்தவர் திருமலையாழ்வார். அவர் திருவாய் மொழியில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக திருவாய் மொழிப்பிள்ளை என்றே அழைக்கப்பட்டார்.

தம் தந்தையாருக்குப் பிறகு திருவாய்மொழிப் பிள்ளை திருவடிவாரத்தில் ஒதுங்கிய மாமுனிகளுக்கு அன்போடு தமிழ் வேதமான ஆழ்வார்களின் அனைத்து அருளிச் செயல்களையும் முறையே ஓதுவித்தார். மாமுனிகள் வைணவத்தில் முழு ஆற்றலும் ஊற்றமும் பெற திருவாய்மொழிப் பிள்ளையே காரணம். இராமாநுஜரின் பெருமைகளைச் சொல்லி மாமுனிகளை இராமாநு ஜரின் திருவடி வாரத்தில் அன்பு கொள்ள வைத் தார். இந்த அன் பின் வெளிப் பாடாகவே யதீந்திரப் பிரவணர் என்று அழைக்கப்பட்டார். திரு வாய்மொழிப் பிள்ளை தந்த ஊற்றத்தில் இராமாநுஜர் மீது "யதிராஜ விம்சதி" என்னும் தோத்திரம் பாடினார். தொடர்ந்து வைணவம் வளம் பெற பற்பல நூல்களை தமிழி லும் வடமொழியிலும் அருளிச்




திரு.எஸ். கோகுலாச்சாரி,
9443439963
புவனகிரி.

செய்தார். யதிராஜ விம்சதி, உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, இயல் சாத்து, திருவாராதன கிரமம், ஸ்ரீதேவராஜ மங்களம், ஸ்ரீகாஞ்சி தேவப் பெருமாள் தோத்திரம், ஆர்த்தி பிரபந்தம் என தம் தனிப்படைப்புகளை அருளிய மாமுனிகள் பிள்ளை லோகாசாரியாரின் ரகசிய கிரந்தங்களுக்கும், அருளாள பெருமாள் எம்பெருமானாரின் ஞானசாரம் மற்றும் ப்ரமேய சாரத்திற்கும், பெரியாழ்வார் திருமொழியின் சில பாசுரங்களுக்கும், இராமாநுச நூற்றந்தாதிக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்.

ஆழ்வார்களின் அருந்தமிழை தலைமீது வைத்துக் கொண்டாடியவர் மாமுனிகள். இதை மணவாள மாமுனிகள் அருளிய உபதேசரத்தின மாலையின் பாடலில் இருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

*"ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி*
*தாழ்வாது மில்குரவர் தாம் வாழி - ஏழ்பாரும்*
*உய்ய அவர்கள் உரைத்த அவைகள் தாம் வாழி*
*செய்ய மறை தன்னுடனே சேர்ந்து"*

வடமொழி வல்ல மாமுனிகள் இவ்வாறு தமிழில் ஆழங்கால் படக்காரணம் திருவாய்மொழிப் பிள்ளை தான். அவர் தமது மாணவரான மாமுனிகளிடம் சொன்னது இது.

"நீர் வடமொழிச் சாத்திரங்களிலே அதிகம் கண் வைக்க வேண்டாம். பிரம்ம சூத்திரங்களுக்கு நம் பிதாமகர் எம்பெருமானார் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை ஒருக் கால் கேட்டு, நமக்கும், எம்பெருமானார்க்கும் பிரியமான திருவாய்மொழி முதலிய திவ்ய பிரபந்தங்களை பரிசீலனை செய்து கொண்டு, நம் பெருமாளுக்கு மங்களாசாசனம் செய்து கொண்டு, திருவரங்கவாசமே செய்திருக்க வேண்டும்!"

தம் வாழ்நாள் முழுதும் இதைக் கடைபிடித்தார் மாமுனிகள். வைணவ நெறியை வகையாகப் பரப்ப எட்டு திக்குகளிலும் பொன்னடிக்கால் ஜீயர், கோயில் அண்ணன், பத்தங்கி பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர், திருவேங்கட ஜீயர், எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார், பிரதிவாதி பயங்கரம் அண்ணா முதலிய சீடர்களை நியமித்தார். மாமுனிகள் மூன்று விதத்தில் வைணவத்திற்கு அருந்தொண்டு ஆற்றி இருக்கின்றார். முன்னோர்களைப் போற்றி அவர்களுடைய நூல்களுக்கு உரை தந்து வளப்படுத்தி இருக்கிறார். வடமொழியிலும் தமிழ்

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்,**
**திருப்பதி**

## திருமலை புனித யாத்திரையை இனிதாக்குவது எப்படி?

* திருமலைக்கு செல்லும் முன்பே இரயில் மற்றும் பேருந்து டிக்கெட்டுகள், தங்கு வசதிகள் மற்றும் சேவை டிக்கெட்டுகளுக்கு முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
* திருப்பதியில் தங்கியிருக்கும் போது ஓய்வு நேரத்தில் உள்ளூர் ஆலய தரிசனம் செய்யுங்கள்.
* திருமலைக்கு நடந்து செல்பவர்களுக்கு வசதியாக திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு வரை இலவசப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
* யாத்திரிகர்கள் தங்கள் உடைமைகளை அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு அடிவாரத்தில் உள்ள கௌண்ட்டரில் செலுத்திவிட்டு, மலை ஏறிச்சென்று திருமலையில் இலவசமாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
* தி.தி.தேவஸ்தானம், மலைவழிச் சாலைகளில் பழுதடையும் வாகனங்களை சரிபார்ப்பதற்கு ரோந்து பழுதுபார்ப்பு வாகனத்தை ஏற்பாடு செய்துள்ளது.
* உங்கள் திருமலை யாத்திரையை விடுமுறை அல்லாத நாட்களில் தொடருங்கள்.
* தங்கு வசதிக்காக உங்கள் குடும்ப உறுப்பினர் அனைவரும் சி.ஆர்.ஓ. அலுவலகத்தில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நபர் மட்டும் க்யூவரிசையில் காத்திருக்கலாம். மற்றவர்கள் சி.ஆர்.ஓ. அலுவலகத்திற்கு பக்கத் தில் உள்ள யாத்திரிகர்கள் வசதிக் கூடத்தில் தங்கி ஓய்வு எடுக்கலாம். அங்கு அனைத்து வசதிகளும் உள்ளன.
* தகவல் அறிவதற்கு, இரயில் நிலையம், விமான நிலையம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட் மற்றும் ரேணிகுண்ட்டா இரயில் நிலையத்தில் உள்ள தகவல் மையங்களை அணுகுங்கள்.
* திருமலை புனிதம் மற்றும் பரிசுத்தத்தை பாதுகாத்திட தாங்கள் தேவஸ்தானத்துடன் ஒத்துழையுங்கள்.

**- செயலாட்சி தலைவர்**




மொழியிலும் மிகச் சிறந்த நூல்களை யாத்து தமிழ் உலகுக்குத் தந்திருக்கிறார். இதனால் வைணவ சமயத்தின் மிகச் சிறந்த ஆசாரியராகப் போற்றப்படும் ஏற்றத்தைப் பெற்றிருக்கிறார். மாமுனிகளின் வாழ்வில் நடந்ததாகக் குறிப்பிடப்படும் சில சம்பவங்கள் சுவாமியின் குண அனுபவத்தை எல்லோரும் இனிதே புரிந்து கொள்ளும்படி செய்கின்றன. மாமுனிகளின் வைராக்கியத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஒருமுறை வடதேசத்திலிருந்து ஒருவர் இவரிடம் கொஞ்சம் பொருளை கைங்கர்யத்துக்காகச் சமர்ப்பித்தார். அப்பொருளைப் பற்றியும், தந்தவர் இயல்பைப் பற்றியும் விசாரித்தறிந்த மாமுனிகள் அப்பொருள் நேரான வழியில் சம்பாதித்ததல்ல என்பதைப் புரிந்துக் கொண்டார். எனவே ஏற்றுக் கொள்ள மறுத்து அதனைத் திருப்பித் தந்து விட்டார். நேர்மையற்ற எதையும் அவர் ஏற்றதில்லை. மாமுனிகள் வாழ்வு வேறு வாக்கு வேறு அல்ல. இரண்டிற்கும் வேறுபாடு இன்றி வாழ்ந்தவர். வரம் தரும் பிள்ளை என்ற அடியவர், மணவாள மாமுனிகளைத் தனியாக வந்து வணங்கினார். அப்போது மாமுனிகள் "இப்படி தனியாக வணங்கக்கூடாது. எம்பெருமானிடத்திலோ ஆசார்யனிடத்திலோ ஸ்ரீவைஷ்ணவர்கள் தனியே செல்லக் கூடாது" என்று கூறி, எப்போதும் மற்ற அடியாரோடு கூடி இருந்தே குளிர்தல் வேண்டுமென அறிவுறுத்தினார்.

"அழகிய மணவாளப் பெருமாள், அழகிய மணவாள மாமுனிகள், ரம்யாஜாமாத்ரு முனி, காந்தோபயந்த்ரு முனி, ரம்யாஜாமாத்ரு யோகி, வரவரமுனி, யதீந்த்ர ப்ரவணர், இராமாநுசர் பொன்னடி, ஸௌம்ய ஜாமாத்ரு யோகீந்த்ரர், பெரிய ஜீயர், ஸுந்தர ஜாமாத்ரு முனி" எனப் பல திருநாமங்களால் கொண்டாடப்பட்ட மாமுனிகள் தொடர்ந்து வைணவத்திற்காக உழைத்துக் கொண்டே இருந்தார்.

அவருடைய அந்திமக்காலம். மணவாள மாமுனிகள் வயதின் முதுமையால் பட்டுத் தலையணையின் மேல் சற்றே சாய்ந்த வண்ணம், விளக்கின் ஒளியில், மிகவும் சிரமப்பட்டு ஆசாரிய இருதய வியாக்யானத்தை ஓலையில் எழுதிக் கொண்டிருக்கிறார். அவரது சீடரான கந்தாடை அண்ணன் வருகிறார். "சுவாமி! இந்த நிலையிலும் மிகவும் சிரமப்பட்டு எழுத வேண்டுமா?" மணவாள மாமுனிகள் (சற்றே புன்னகை செய்து) அவருக்குப் பதில் சொல்கிறார். "என்ன செய்வது? எம்பெருமானார் இடைவிடாது கட்டிக்காத்த இந்த தரிசனத்தை நாம் விட்டு விட முடியுமா? குறைவில்லாத் தத்துவத்தை நிறைவாகக் கொண்டு செல்லும் பொறுப்பு நமக்கு இருக்கிறதே! உடல் சிரத்தையைப் பார்த்தால் எதிர்காலச் சந்ததியினருக்கு இந்த நிதியை யார் காட்டிக் கொடுப்பது?"

இப்படிச் சொன்ன அவர் தமக்கு முக்திப் பேற்றினை அருள அரங்கனிடம் வேண்டுகின்றார். "எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால், பொன்னான எதிராசரின் திருவடித் தொடர்பு பெற்றேன். அந்தத் திருவடிகளைக் காண ஆவல் கொண்டுள்ளேன். அதற்கு எம்மை அவரிடம் சேர்ப்பித்தருள வேண்டும்" என்று விண்ணப்பிக்க அரங்கனும் ஏற்றுக் கொள்கின்றான்.

அடியார்களின் கோரிக்கைக்கு இணங்க, தனது அர்ச்சாரூப விக்ரகம் தந்து விடை பெறுகிறார். மாமுனிகள் அடிக்கடி உயர்ந்த பல கருத்துக்களை அடியார்களுக்குச் சொல்லிக் கொண்டேயிருப்பார். எது தொண்டு எது பாவம் என்பதற்கு மாமுனிகள் கொடுத்த விளக்கம் இது. "ஸ்ரீவைஷ்ணவர்களை வணங்குவதும் உதவுவதும் உயர்ந்த தொண்டு. அவர்களைப் பழிப்பது கொடூரமான பாவம்." வாக்காலும், நோக்காலும், வண்ணத்தாலும், எண்ணத்தாலும் வாழ்ந்த உன்னதமான ஆசார்யனுக்கு கிடைத்த பெருமை என்ன தெரியுமா? அவரை தமது குருவாக பெரிய பெருமாளே (திருவரங்கனே) வரித்து தனது சேஷ பர்யங்கத்தைச் (ஆதிசேஷ பீடத்தை) சமர்ப்பித்தார். இன்றும் மணவாள மாமுனிகள் சேஷ பீடத்திலேயே எழுந்தருளி இருப்பதை நாம் சேவிக்கலாம்.

மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்.

**வாழ்க்கை நெறிகள் தொடரும்...**



**ஓம் ஸுசயே நம:**

# வரலாற்றுப் புகழ் மிக்க திருச்சானூர் திருத்தலம்



தெலுங்கு மூலம் : திரு. ஐ.எல். எம். சந்திரசேகர ராவ்
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா, 9985003156

*ஈசாநாம் ஜகதோ(அ)ஸ்ய வேங்கடபதேர் விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்*
*தத்வக்ஷஸ் ஸ்தல நித்ய வாஸ ரஸிகாம் தத்க்ஷாந்தி ஸம்வர்த்திநீம் |*
*பத்மாலங்க்ருத பாணிபல்லவ யுகாம் பத்மாஸநஸ்தாம் ச்ரியம்*
*வாத்ஸல்யாதிகுணோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந்மாதரம் ||*

கலியுக தெய்வமான திருவேங்கடவனின் தேவியாகவும், அருள் வடிவ தேவியாகவும், பக்தர்களின் கற்பக வல்லியாகவும் சிறப்பு பெற்ற ஸ்ரீபத்மாவதி தாயார் கொலுவீற்றிருக்கும் திருத்தலம் திருச்சானூர்.

திருமலை திருத்தலம் எவ்வளவு சிறப்பு பெற்றதோ, அத்தகைய சிறப்பு பெற்ற இடமாக விளங்குகின்ற திருச்சானூர் திருப்பதியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

ஆதி காலத்தில் ஸ்ரீசுகமஹரிஷி இப்பகுதியில் வாழ்ந்து வந்ததால் இப்பகுதியை "ஸ்ரீசுகநூரு" என்ற பெயரால் அழைத்தனர். ஸ்ரீசுகநூரு என்பதே திருச்சானூர் என்றாயிற்று. இத்தலத்தை "அலமேலுமங்காபுரம்", "அலிமேலு மங்கபட்டிணம்" என்ற பெயர்களாலும் அழைத்தனர்.

திருமலை ஆலயம் எத்தகைய வரலாற்றுப் புகழ் மிக்கதோ அத்தகைய வரலாற்றுப் புகழ் மிக்கது இந்த திருச்சானூர். பண்டைய காலத்தில் திருமலைக்கு செல்ல சரியான வசதிகள் இல்லாததால் திருமலை பிரம்மோத்ஸவத்தை திருச்சானூரிலேயே நிகழ்த்தியதாக சில வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. பண்டைய காலத்தில் திருமலையில் துவஜாரோஹணம் ஒன்றை மட்டுமே நிகழ்த்தி வந்தனர். மற்றைய வாகன சேவைகள் அனைத்தையும் திருச்சானூரில் தான் நிகழ்த்தி வந்தனர். பின்னர் இராமாநுஜர் இந்த உத்ஸவம் அனைத்தையும் திருமலையிலேயே நடத்த ஏற்பாடு செய்தார். அதுமட்டுமின்றி திருமலை திருவேங்கடவனின் பிரதிரூபத்தை திருச்சானூர் ஆலயத்தில் வைத்து பூஜைகள் நிகழ்த்தி வந்தனர். திருமலைக்கு செல்ல முடியாத பக்தர்களுக்கு திருச்சானூரிலேயே தரிசன பாக்கியம் அளித்து வந்ததாக கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய தமிழ் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஸ்வாமிக்கு திருச்சானூரிலேயே ஆலயத்தையும் நிர்மாணித்தனர். இந்த ஆலயத்திற்கு "திருவிலன்கோயில்" என்றும், அங்கிருக்கும் ஸ்வாமிக்கு "திருவேங்கட பெருமனடிகள்" என்றும் பெயர் இருந்ததாக கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகிறது.

திருச்சானூரில் சுமார் 50க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இந்த கல்வெட்டு

**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் திருக்கோயிலில் கார்த்திகை மாத பிரம்மோத்ஸவம் நவம்பர் 23 முதல் டிசம்பர் 01 வரை நடைபெறும்**

கள் அனைத்தும் திருச்சானூரின் சிறப்புகளைக் கூறுவதாக உள்ளன. இதன் மூலமாக திருப்பதியில் திருச்சானூர் ஓர் ஆன்மீகத் தலமாக இருந்ததை அறிய முடிகிறது. கி.பி. 8ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருச்சானூர் ஓர் வைணவத் தலமாக விளங்கியது. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வைணவர்கள் பலர் திருச்சானூரில் குடியேறி னார்கள்.

அக்காலத்தில் திருமலையின் பெருமைப் பற்றி அறிந்திருந்தும் வைணவர்கள் திரு மலைக் குச் செல்லாமல் திருச்சானூரில் உள்ள ஸ்வாமி யையே வழிபட்டனர். இங்குள்ள வேங்கடவனுக்கே முக்கியத்துவத்தை அளித்தனர். கி.பி. 9ஆம் நூற் றாண்டின் இறுதியில் "தொண்டை மண்டலம்" பகுதியை சோழர்கள் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். திருப்பதி, திருச்சானூர் ஆகிய பகுதிகள் தொண்டைமண்டலத்தின் ஆட் சிக்கு உட்பட்டதாக இருந்தன. சோழர்கள் சைவ சமயத் தின் மேல் பற்று கொண்டவராக இருந்ததால் திருச் சானூர் பகுதியில் சைவ மத மக்கள் குடியேறினர். சோழர்கள் திருச்சானூரின் மேற்கு பகுதியில் (தற் போது உள்ள யோகிமல்லாவரம்) சிவாலயத்தைக் கட்டினர். அதுவே தற்போது உள்ள பராசரேஸ்வர ஸ்வாமி ஆலயமாகும். தொண்டைமண்டலத்தில் சோழர் களின் ஆட்சி 13ஆம் நூற்றாண்டில் முடிவுற்றன. முதலாம் ஜடவர்ம சுந்தர பாண்டியன் சோழ அரசின் இப்பகுதியை ஆக்கிரமித்ததால் சோழர் காலம் முடிவடைந்தது. பின்னர் சிறிது காலம் யாதவர்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் காலத்தில் தான் திருச்சானூரில் ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. கி.பி. 1336ஆம் ஆண்டு முதல் விஜய நகர அரசு சிறிது காலம் இப்பகுதியை ஆண்டு வந்தனர். அவர்களின் ஆட்சியின் போது திருச்சானூரிலும் திருமலையிலும் பெருமாற்றம் ஏற்பட்டது. விஜய நகர சக்கரவர்த்திகளின் காலத்தில் ஸ்ரீபத்மாவதி தாயாரின் ஆலய முக மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயே அரசர்கள் திருமலையை ஹதிராம்ஜி மடத்திடம் ஒப்படைத்தனர். 1843 ஜுலை 16ஆம் தேதி முதல் 1933ஆம் ஆண்டு வரை திருமலை ஆலயத்தை ஹதிராம்ஜி மடத்தினர் நிர்வகித்தனர். இவர்கள் திருச்சானூரின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டனர். பிற்காலத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் நிர்வாகப் பொறுப்பு கொண்டு வரப்பட்டு, தற்போது பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, எழில் மிகு ஆலயமாகியது.

அதுமட்டுமின்றி திருவேங்கடமுடையானை பக்தியுடன் சேவித்து புகழ்ந்து பாடிய தாள்ளபாக்க அன்னமய்யா முதன் முதலில் ஸ்ரீபத்மாவதி தாயாரைப் பற்றியே சதகம் எழுதினார். அதுமட்டுமின்றி பல கீர்த்தனைகளையும் தாயாரின் மீது பாடியுள்ளார்.






## திருமலை வரலாறு :

திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு முன்பே ஆதிவராஹ ஸ்வாமி தான் கொலுவீற்றிருந்தார். ஆகையால் தான் திருமலை ஆதிவராஹ க்ஷேத்ரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதிவராஹ ஸ்வாமி யார்? இங்கே ஏன் எழுந்தருளினார்? எப்பொழுது வந்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த வரலாற்றை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதனை இப்பொழுது காண்போம்.

## வராஹவதாரம் :

ஒரு நாள் பிரம்ம தேவன் உயிர்களைப் படைத்து மிகவும் அயர்ந்து விட்டார். அவ்வாறு அயர்வாக இருந்த பிரம்மதேவனுக்கு உறக்கம் வந்து விட்டது. அதனால் படைப்பு தொழிலும் நின்றது. பிரளயமும் உண்டானது. அப்போது இரண்யாட்சன் எனும் அரக்கன் பூமியை சமுத்திரத்தின் அடியில் கொண்டு சென்றான். அந்த பூமியை தன் கால்களால் உதைத்தும், தூக்கி எறிந்தும் விளையாடினான். உறக்கத்தில் இருந்து எழுந்த பிரம்ம தேவன் காப்பாற்றுங்கள் என்று மஹாவிஷ்ணுவை வேண்டினார்.

உடனே விஷ்ணு பகவான் பெரிய வராஹ அவதாரத்தை தரித்து, இரண்யாட்சனை அழித்து, தன் கோரைப்பற்களால் பூதேவியை காப்பாற்றினார். அந்த ஸ்வாமி வராஹ உருவில் செய்த இக்காரியத்தை தேவதைகள் எல்லோரும் புகழ்ந்து, ஓ வராஹ ஸ்வாமி பூதேவியுடன் இங்கேயே எழுந்தருளி எல்லோரையும் காப்பாற்றுங்கள் என்று வேண்டினர்.

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696

வராஹ ஸ்வாமியும் கருடாழ்வாருடன் வைகுண்டத்தையும், அங்குள்ள குளத்தையும் வரவைத்து இங்கே எழுந்தருளினார். அந்நாள் முதல் இது ஆதி வராஹ க்ஷேத்திரம் என்றும், இந்த குளம் ஸ்வாமி புஷ்கரணி என்றும் அழைக்கப்பட்டது. அதன் பின் சில ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு இத்தலத்திற்கு திருவேங்கடமுடையானும் வந்து எழுந்தருளினார். அந்த ஸ்வாமி எதற்கு வந்தார்? வந்தவர் இங்கே ஏன் நிலை கொண்டார் என்பதை பற்றி இனி அறிவோம்.

## யாகம் யாருக்காக?

ஆதிகாலத்தில் ஒரு நாள் பவித்திரமான கங்கை நதிக்கரையில் முனிவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உலக மக்களின் நன்மைக்காக ஒரு யாகத்தை செய்ய எண்ணினர். வேத மந்திரங்கள், மங்கள வாத்தியங்களின் நடுவே யாகம் கோலாகலமாகத் துவங்கியது.

அப்போது நாராயணா! நாராயணா! என்று ஆகாயத்திலிருந்து கலகத்தை ஏற்படுத்தக் கூடிய நாரதர் அங்கு வந்தார். அவரை கண்ட முனிவர்கள் இனி இந்த யாகம் நிகழாது என்று இகழ்ந்து உரைத்தனர். இன்னும் சிலர் உலக நன்மைக்காக செய்யும் யாகத்தில் பங்கேற்க தேவரிஷி இறங்கி வந்துள்ளார் என்று புகழ்ந்தும் பேசினர்.



நாராயணா! நாராயணா!! என்று வருகை புரிந்த நாரதரை அனைவரும் எழுந்து நின்று வணங்கி வரவேற்றனர். நாரதர் முனிவர்களைப் பார்த்து நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். ஸ்வாமி! தேவரிஷியே! நாங்கள் உலக மக்களின் நன்மைக்காக யாகம் செய்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் தாங்கள் வந்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. எங்களை ஆசிர்வதியுங்கள் என்று வேண்டி வணங்கினர்.

நாராயணா! நாராயணா!! என்று கூறிக் கொண்டு நாரத முனிவர் "என்ன! உலக நன்மைக் காக இந்த யாகத்தை செய்கிறீர்களா? நன்று! நன்று. உங்கள் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கும் தெய்வம் யார்? சிவனா? விஷ்ணுவா? பிரம்மனா? யாருக்காக இந்த யாகம் என்று கேட்டார். அப் பொழுது முனிவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்நேரத்தில் நாரதர் இவ் வாறு கூறினார். மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் ஆகிய மூவரும் சிறந்தவர் களே. இந்த மூவரிலும் உலகிற்கு மகிழ்ச்சியைத் தருபவர் யார்? பக்தர்கள் வேண்டும் வரத்தை அருளுபவர் யார்? நம் பாவங்களைப் போக்கி நல் அருளைத் தரும் பரந்தாமன் யார்? அதுமட்டுமின்றி

- ⇨ ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- ⇨ புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப்படுத்தாதீர்.
- ⇨ பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- ⇨ திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- ⇨ க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

இனி கலியுகம் வரப்போகிறது, கலிதோஷத்திலிருந்து நம்மை காப்பவர் யார் என்பதை முன்னதாக நிர்ணயித்துக் கொண்டு, அதன் பின் யாகம் செய்யுங்கள். உங்கள் கோரிக்கை தீரும். நன்மை கிட்டும் என்று கூறி விட்டு மறைந்து விட்டார்.

### யார் உயர்ந்தவர் :

நாரதர் பேச்சால் முனிவர்கள் அனைவரும் குழப்பமடைந் தனர். அந்த நாரதர் கூறிய மொழிகள் உண்மை அல்லவா என்று ஒருவருக்கொருவர் தம் ஐயத்தை வெளிப்படுத்தினர். மும்மூர்த்திகளில் யார் உயர்ந்தவர் என்று எவ்வாறு அறிந்து கொள்வது? இது எளிமையான செயலா? யார் நிர்ணயிப்பார்? என்று எல்லோரும் ஆலோசனை செய்தவாறு இருந்தனர். பின்னர் இந்த ஐயத்தைத் தீர்த்து வைக்குமாறு பிருகு மஹரிஷியிடம் சென்று கோரினர். இது உலக நன்மைக்காக செய்யும் யாகம் அல்லவா இதற்கு நிச்சயம் தீர்வு காண வேண்டும் என்று பிருகு மஹரிஷி எழுந்து புறப்பட்டார்.

### இனி உமக்கு பூஜை இல்லை :

முதலில் பிருகு மஹரிஷி படைப்புக் கடவுளான பிரம்ம தேவன் வீற்றிருக்கக்கூடிய சத்ய லோகத்திற்குச் சென்றார். அங்கே வெண்தாமரையில் நான்முகனான பிரம்ம தேவன் வேதநாதங்களுடன், அவர் அருகில் மற்றொரு வெண் தாமரையில் கலைவாணியான சரஸ்வதி தேவியும் வீற்றிருந்தனர். வேத நாதங்களுடன் வீணை நாதத்தையும் கண்டு பிருகு மஹரிஷி பரவசமடைந்தார். ஆனால் பிரம்மதேவனும் சரஸ்வதி தேவியும் பிருகு மஹரிஷி வந்ததை



கவனிக்கவில்லை. வேத நாதத்திலும் வீணை இசையிலும் மூழ்கிக் கிடந்தனர். அப்பொழுது பிருகு மஹரிஷி எவ்வளவு அலட்சியம் என் மேல் என்று மிகுந்த கோபமடைந்து பிரம்ம தேவனைப் பார்த்து இனி மேல் உமக்கு பூலோகத்தில் பூஜையே இல்லை என்று சபித்து விட்டார்.

**அருவமாகக் கடவாய்:**

சத்ய லோகத்தில் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்துக் கொண்டே பிருகு மஹரிஷி கைலாயத்திற்குச் சென்றார். அங்கே நந்தீஸ்வரர், இப்பொழுது நீங்கள் உள்ளே செல்லக் கூடாது. பார்வதி பரமேஸ்வரர் ஏகாந்த மந்திரத்தில் உள்ளனர் என்று தடைசெய்தார்.


கோபம் கொண்ட முனிவர் நந்தீஸ்வரரை தள்ளி விட்டு உள்ளே சென்றார். உடனே பரமேஸ்வரனுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டு திரிசூலத்தைக் கொண்டு பிருகு



மஹரிஷியைக் கொல்ல முயன்றார். அப்பொழுது பார்வதி தேவி தடுத்து நிறுத்தினார். பிருகு மஹரிஷி மேலும் கோபமடைந்து "ஓ சிவா! அருவமாகக்கடவாய், பூலோகத்தில் லிங்க வடிவில் மட்டுமே உமக்கு பூஜைகள் நடைபெறும்" என்று சாபம் விடுத்து அங்கிருந்து சென்று விட்டார்.

**ஆனந்தத்தை அருளும் தெய்வம் :**

பிருகு மஹரிஷி மன வேதனையுடன் வைகுண்டத்திற்குள் பிரவேசித்தார். அங்கே துவார பாலகர்களான ஜய, விஜயர்கள் அந்த மஹரிஷியை உள்ளே செல்ல விடாமல் தடுத்தனர். ஆனாலும் மஹரிஷி அவர்களை மீறி மிக்க சினத்துடன் உள்ளே சென்றார். பாம்பணையில் பள்ளி கொண்டிருந்த ஸ்ரீமஹா விஷ்ணுவையும், அவருடைய மார்பின் மேல் தலை சாய்த்து இன்பக்



கடலில் மூழ்கியவாறு இருந்த லக்ஷ்மி தேவியையும் பிருகு மஹரிஷி பலவாறு பாடி துதித்தார். புகழ்ந்தார். அழைத்தார். கோபமாக கத்தினார். ஆனாலும் ஸ்ரீமஹா விஷ்ணுவும், லக்ஷ்மி தேவியும் அந்த முனிவரை காணாத வாறு இருந்தனர். இதனால் பிருகு மஹரிஷியின் கோபம் அளவிற்கடங்கா வண்ணமாக இருந்தது. அவரால் பொறுக்க முடியாமல் பாம்பணையில் பள்ளி கொண்டிருந்த மஹா விஷ்ணுவின் மார்பின் மேல் தன் காலால் எட்டி உதைத்தார். அப்பொழுது லக்ஷ்மி தேவி அவ்விடத்தில் இருந்து விலகினார். உடனே மஹாவிஷ்னு எழுந்து நின்று முனிவரிடம் தாங்கள் வந்ததை கவனிக்க வில்லை. எங்களை மன்னியுங்கள் என்று முறையிட்டார். அதுமட்டுமின்றி அந்த முனிவரை சமாதானப்படுத்தி பாம்பணையில் அமர்த்தி கால்களை அழுத்தியவாறு பாதத்தில் இருந்த அகங்காரக் கண்ணை நீக்கினார்.

உடனே அந்த முனிவரின் ஆணவம் அழிந்து தாம் செய்த தவற்றை மன்னியுங்கள் என்று வேண்டினார். ஸ்ரீமஹா விஷ்ணுவே அனைவராலும் பூஜிக்கப்படுபவர். அனைவருக்கும் ஆனந்தத்தை அருள்பவர் என்று நிர்ணயித்துக் கொண்டு பூலோகத்திற்கு வருகை புரிந்து இந்த யாகத்தை விஷ்ணுவின் மூலமாக நிறைவு செய்தார்.

இவ்வாறு ஸ்ரீமஹாவிஷ்ணு திருவேங்கடமுடையான் என்ற பெயரால் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து பூலோகத்திற்கு வருகை புரிந்தார்.

திருமலை வைபவம் தொடரும்...

# திருக்கார்த்திகை







**சிறார் வாக்கு**

**செல்வன் அதுல், கேரளா**

கார்த்திகை தீபம், கார்த்திகை விளக்கு, திருக்கார்த்திகை என்று பல பெயர்களில் இப்பண்டிகை கார்த்திகை மாதத்தில் இந்தியா முழுவதுமின்றி இலங்கை, நேபாளம் போன்ற வெளிநாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.இம்மாதத்தில் முருகப் பெருமான், சிவபெருமான், மஹாவிஷ்ணு, துர்கை, நாக தேவதை, ஐயப்பன் கோயில்களில் தீபம் ஏற்றி சிறப்பு வழிபாடுகளும் நடைபெறும். ஒருமுறை சிவபெருமான் ஆதிஅந்தமில்லா ஜோதி வடிவெடுத்தார். அந்நாளையே கார்த்திகை தீபத் திருநாளாக கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

திரிபுர சம்ஹாரம் கார்த்திகை மாதத்தில் நடைபெற்றது. கார்த்திகை பெண்கள் முருகப் பெருமானை வளர்த்ததால், நட்சத்திர பதவி அடைந்து, பெருமை பெற்றனர். அவர்களை நினைவு கூறும் வகையில் கார்த்திகை தீபங்கள் ஏற்றப்படுகின்றன.

**விரதங்கள் :**

கார்த்திகை சோமவாரம் (திங்கட்கிழமை) விரதம், கைசிக ஏகாதசி, துவாதசி, பௌர்ணமி, த்ரிலோசன கௌரி விரதம், நாகுலசவிதி, திருவண்ணாமலை தீபம், ஐயப்பனுக்காக மாலை சாத்திக் கொள்ளுதல் போன்ற விரதங்கள் இந்த கார்த்திகை மாதத்தில் தான் மேற்கொள்ளப்படுகின்றன.

**தீபம் மற்றும் பூஜை :**

கார்த்திகை மாதத்தில் தினமும் வீட்டில் காலையிலும், மாலையிலும் நெய், நல்லெண்ணை அல்லது தேங்காய் எண்ணெயில் விளக்கேற்றுவதும், துளசி மாடத்தின் முன்பு விளக்கேற்றுவதும் நல்லது. கோயில்களில் விளக்கேற்றுவதும் நல்லது. கோயில்களில் பெரிய பானை போன்ற மண்பாண்டத்தில் தீபம் ஏற்றுவார்கள். கொடிமரம் அருகில், கோபுரம் அருகில் மிக பெரிய தீபம் ஏற்றி வழிபடுவார்கள். திருவண்ணாமலையில் மலையாக இருக்கும் சிவபெருமானுக்கு மலை மீது பெரிய தீபம் ஏற்றுவார்கள். சிவபெருமான் அன்றைய நாள் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி அளிப்பார்.

துளசி மாடத்திற்கும், நதிகளிலும் விளக்கேற்றி வழிபடுவது குடும்பத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கும். வன போஜனம், நதி ஸ்நானம் போன்றவற்றை செய்தல் சாலச்சிறந்தது. வஸ்திர தானம், கோ(பசு) தானம், அன்னதானம், விளக்கு தானம், துளசி தானம் போன்றவை செய்தால் குடும்பம் தழைக்கும். பொரியுடன் வெல்லம் கலந்த லட்டினை நைவேத்தியம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு மாதம் முழுவதும் சிறப்பு வாய்ந்த கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம் ஏற்றி கொண்டாடுவோமாக.

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை
## நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



கருடக்கொடி முன் செல்ல, உபயதேவியர்களோடு
திருமலையப்ப ஸ்வாமி திருமலை மாடவீதிகளில்
திருவீதி உலா





திருவேங்கடமுடையான் ஆலய துவஜஸ்தம்பத்தில் கருடக்கொடி ஏற்றம்



ஆ.மா. அரசு சார்பில் ஸ்வாமிக்கு பட்டுவஸ்த்திரங்களை
சமர்ப்பிக்கின்ற மாண்புமிகு முதல்வர்
திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள்



பெரிய சேஷ வாகன சேவையில் பங்கு பெற்ற மாண்புமிகு
ஆ.மா.முதல்வர் திரு. ஒய்.எஸ்.ஜகன்மோகன் ரெட்டி அவர்கள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை நடைபெற்ற

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



பெரியசேஷ வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி !



சிறியசேஷ வாகனத்தில் சேஷசயனவாசன்!
ஜீயர் ஸ்வாமிகள், அத்யாபகர்களின் திவ்யப்பிரபந்த கோஷ்டி



ஹம்ஸ வாகனத்தில் கலைவாணி வடிவில் ஸ்ரீஹரி !



சிம்ம வாகனத்தில் ஸ்ரீநிவாசன் !



முத்துப்பந்தல் வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் முகில்வண்ணன் !



கல்பவிருக்ஷ வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் கமலக்கண்ணன் !



சர்வபூபால வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் சர்வேஸ்வரன்!



ஜகன்மோகினி அலங்காரத்தில் ஜகன்மோஹனன் !

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 30-09-2019 முதல் 08-10-2019 வரை நடைபெற்ற

# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



கருட வாகனத்தில் ஸ்ரீகருடாசலபதி !



அனுமன் வாகனத்தில் வேங்கடராமன் !



யானை வாகனத்தில் ஏழுமலையப்பன் !



சூரியப்பிரபை வாகனத்தில் சுந்தர ஸப்தகிரிவாசன் !



சந்திரப்பிரபை வாகனத்தில் வேங்கடவன் !



தங்கத்திருத்தேரில் தாமரைக்கண்ணன்



குதிரை வாகனத்தில் திருமலை குணசீலன்



உபயதேவியருடன் எழுந்தருளும் திருமலையப்ப ஸ்வாமி
முன்னிலையில் சக்கர தீர்த்தோத்ஸவம்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# 30-09-2019 முதல் 08-10-2019 வரை நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



ஸ்வாமி தரிசனத்திற்குப் பின்னர் மேதகு ஆ.மா. ஆளுநர் திரு.பிஷ்வபூஷன் ஹரிசந்தன் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்கள் வழங்கினர்.



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்களுக்கு ஸ்வாமி தீர்த்தப்பிரசாதத்தையும், சித்திரப்படத்தையும் வழங்குகின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். மற்றும் உயர் அதிகாரிகள்



ஊஞ்சல் சேவை



ஸ்நபன திருமஞ்சனம்





கலைக்குழுவினர்







# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவ வைபவம்

தெலுங்கு மூலம் : டாக்டர். ஆ. விபீஷன சர்மா
தமிழாக்கம் : திருமதி ஏ. அருணா, 9702734848.

ஸ்ரீ மஹாவிஷ்ணு பூ உலகில் 108 திவ்ய தேசங்களில் அர்ச்சாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார். அவற்றில் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், தோதாத்ரி, சாலக் கிராமம், நைமிசாரண்யம், பத்ரிகாஸ்ரமம், காஞ்சிபுரம், வேங்கடாசலம் எனும் திருமலை என எட்டு தலங்களில் சுயம்புவாக எழுந்தருளி பூஜைகளை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்.

இத்தலங்களில் திருமலையே அந்த எம்பெருமானின் சிறப்புகளுக்கு சாட்சியாக விளங்குகிறது. அந்தப் பரந்தாமனின் பட்டத்தரசியான அலர்மேல்மங்கையும் இங்குள்ள திருச்சானூரில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

அதுமட்டுமல்லாமல் கலியுக தெய்வமான ஸ்ரீநிவாசன் தவம் செய்த புண்ணியத் திருத்தலமும் திருச்சானூராகும். சூரிய நாராயண ஸ்வாமி முன்னிலையில் தன் இதய கமலத்தின் மீது வாழ்ந்து வரும் லக்ஷ்மி தேவிக்காக 12 ஆண்டு காலம் தவமிருந்தார். பல மகிமைகளுக்கு நிலையமான பத்மசரோவரத்தில் (தாமரைக்குளம்), கார்த்திகை மாதத்தில், சுக்லபக்ஷ பஞ்சமி திதி, உத்திராடம் நட்சத்திரத்தில் வெள்ளிக்கிழமையன்று தங்கத் தாமரையில் மஹாலக்ஷ்மி தாயார் அவதரித்தார்.

இத்திருத்தலத்தில் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் பஞ்சமி திதி அன்று நிறைவடையும் விதமாக தாயாருக்கு பிரம்மோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெறும். இந்த ஒன்பது நாட்களில் பத்மாவதி தாயார் காலை, இரவு வேளைகளில் பலவித வாகனங்களில் திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் புரிகின்றார்.

## துவஜாரோஹணம் :



கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவனின் இதயத்தில் வீற்றிருக்கும் பத்மாவதி தாயாருக்கு “கஜதுவஜாரோஹண”(கொடியேற்ற)த்துடன் பிரம்மோத்ஸவம் ஆரம்பமாகிறது. துவஜம் ஆலயத்தின் ஆத்ம



ஸ்தானமாகும். அனைத்து தேவர்களையும் வரவேற்பதே இக் கொடியேற்றும் விழாவின் பொருளாகும்.

## சிறிய சேஷ வாகனம் :

பத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவத்தின் முதல் நாள் சிறிய சேஷ வாகனம். சேஷன், ஸ்ரீவைகுண்டத்தில் நித்திய சூரியனாகி, லக்ஷ்மி நாராயணனுக்கு சேவை செய்து கொண்டு உள்ளார். அனைத்து ஜீவகோடிகளையும் காப்பாற்றும் அந்த லோக மாதா சிறிய சேஷ வாகனத்தின் மீது தரிசனம் அளிக்கிறார். அனைவரையும் காக்கும் எம்பெருமானை அறிந்து கொள்வதற்கு தாயாரின் கருணையே முதற் காரணம்.

## பெரிய சேஷ வாகனம்

பிரம்மோத்ஸவத்தின் 2வது நாள் பகல் பெரிய சேஷ வாகனம். லக்ஷ்மி சமேதனனான மஹாவிஷ்ணுவின் வடிவான திருவேங்கடவனுக்கு தாசனாகவும், படுக்கையாகவும், சிம்மாசனமாகவும், குடையாகவும் ஆதிசேஷன் சேவை செய்து கொண்டிருக்கிறார். பரமபுருஷனான ஸ்ரீநிவாசனின் இதயத்தில் வீற்றிருக்கும் பத்மாவதியே பலவிதமான அம்சங்களுடன் மற்ற உயிரினங்களுக்கும் பெருமையை தருபவர். மஹாலக்ஷ்மி தாயாரே! பெருமாளிடம் இருப்பதால் தான் அவர் ஸ்ரீயப்பதியானார். பெண்ணின் அம்சம், யானைகள், குதிரைகள், பறவைகள், பாம்புகள் ஆகியவைகளில் சிறப்பு அம்சங்களாய் நீ உள்ளாய். செடிகள், கொடிகள், பசுமையான பயிர்கள், பசுக்கள் இவற்றில் எல்லாம் நீ இருக்கின்றாய் என்று அகத்தியன் ஸ்தோத்திரம் செய்தார். பிரம்மோத்ஸவத்தின்போது சேஷ வாகனத்தின் மீது அமர்ந்து பக்தர்களின் பாவங்களை போக்குகின்றார்.

## ஹம்ச வாஹனம் :

இரண்டாவது நாள் இரவில் ஹம்ச வாகனத்தின் மீது வீணையை ஏந்தி தாயார் தரிசனம் தருகிறார். கல்விக்கு அதிபதியான கலைவாணியின் வாகனம் ஹம்சம்(அன்னம்). அன்னப் பறவையானது நீரையும், பாலையும் தனித்தனியாக பிரிக்கக் கூடிய தன்மையுடையது. இவையெல்லாம் அத்தாயாரின் கருணையுடன் நடக்கிறது. ஆயக்கலைகள் அனைத்தும் பத்மாவதி தாயார் அனுகிரகத்தால் மட்டுமே கிடைக்கும்.

## முத்துப்பந்தல் வாகனம் :

பிரம்மோத்ஸவத்தின் 3வது நாள் காலையில் முத்துப் பந்தல் வாகனத்தின் மீது தாயார் திருவீதி உலா வருகின்றார். கடலில் பிறந்த முத்துக்களுடன்தான் தானும் பிறந்தார். ஆகையால் அந்த



பத்மாவதிக்கு முத்துக்கள் என்றால் அதீதப் பிரியம். அதேபோல் யானையின் கும்பஸ்தலத்தில் முத்துக்கள் இருக்கும் என்றும், தாமிரபரணி நதிக்கரையிலும், கல்ப விருக்ஷ மரத்தின் பட்டைகளிலும் முத்துக்கள் இருக்கும் எனவும் புராணங்கள் கூறுகின்றன. இந்த முத்துக்களை தாயாரின் சிரிப்பு, பேச்சு, வெட்கம், நாணம் போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

## சிம்ம வாகனம் :

பிரம்மோத்ஸவத்தின் 3வது நாள் இரவு சிம்ம வாகனத்தின் மீது தாயார் திருவீதி உலா வருகிறார். தீயவர்களை அழிக்கவும் அடியார்களை காக்கவும் தாயார் யதேச்சையாக செயல்படுவார். பத்மாவதி தாயார் ஐச்வர்யம், வீரியம், வெற்றி, ஸ்ரீ, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையும் பக்தர்களுக்கு பிரசாதிக்கின்றார். திருவேங்கடவனின் இதயத்து ராணியாகப் போற்றப்படும் அலர்மேல்மங்கை தாயார் சூரியனில் ஒளி, சந்திரனில் குளுமை, தாகம் தீர்க்கும் தண்ணீர், பூமியில் வாசனையுடன் மலரும் சக்தியை பெற்ற கமலம் போன்றவை ஐச்வர்யத்தின் வடிவங்களாகும். சிம்ம வாகனத்தின் மீது அழகாக அமர்ந்து தரிசனம் கொடுக்கும் தைரிய லக்ஷ்மியே இத்தாயார்.

## கல்பவிருக்ஷ வாகனம் :

4வது நாள் காலை கல்ப விருக்ஷம் பத்மாவதி தாயாருக்கு வாகனமாகிறது. பாற்கடலை கடைந்தபோது, மஹாலக்ஷ்மி தாயாருடன் தோன்றிய 16 பொருட்களில் கல்பவிருக்ஷமும் ஒன்றாகும். இந்த கல்பவிருக்ஷம் அனைத்துக் கோரிக்கைகளையும் தீர்க்கும் வல்லமையுடையது. அலர்மேல்மங்கை தாயார் கல்ப விருக்ஷத்தின் மீது அமர்ந்து வேண்டும் வரங்களை அளித்து பக்தர்களின் துன்பங்களைப் போக்கி பரிபூரண சக்தியாக திகழ்கிறார்.

## ஹனுமத் வாகனம் :

4வது நாள் இரவு அனுமன் வாகனத்தின் மீது பத்மாவதி தாயார் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கிறார். அனுமன் அறிவு, ஆற்றல், பக்தி உடையவன். சக்கரவர்த்தி திருமகன் மீது அபார பக்தியைக் கொண்டவன். சீதையைத் தேடி, கடலைத் தாண்டி இலங்கையைச் சென்று அடைந்து, அங்கு அசோக வனத்தில் சீதா பிராட்டியைக் கண்டு, ராமமுத்திரையை காண்பித்தான். இராமபிரான் மிக விரைவிலேயே வானரப்படைகளுடன் இலங்கைக்கு வந்து, தங்களை அழைத்துச் செல்வார் என்றான். அப்படி இல்லையெனில் என்னுடன் வாருங்கள், நான் இராமபிரானிடம் சேர்பிக்கிறேன் என்றான். சீதையோ இராமபிரானே வந்து இராவணனை வெற்றிக் கொண்டு அழைத்துக் செல்லட்டும் என்றார். அந்த பிராட்டிதான் கலியுகத்திலே பத்மாவதியாக அவதரித்து அர்ச்சாமூர்த்தியாக திருச்சானூரில் பூஜை












களை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஸ்ரீராமனின் உண்மையான பக்தனாக இருக்கும் அனுமனின் வேண்டுதலை தீர்க்கும் வித மாக ஸ்ரீராமபிரான் அலங்காரத்தில் தாயார் அனுமனை வாகன மாகக் கொண்டுள்ளார். அனுமன் மீது அலர்மேல்மங்கை தாயா ரின் தரிசனம் பக்தர்களுக்கு பலம், கீர்த்தி, தைரியம், ஆரோக் கியம் அளிக்கும்.

**பல்லக்கு உற்சவம் :**

பத்மாவதி தாயாரின் கார்த்திகை மாத பிரம்மோத்ஸவத் தில் 5வது நாள் ஜகன்மோஹிணி, விஸ்வரூபிணியான தாயார் சூரிய சந்திரனை தலையில் சூடாமணியாக தரித்து பல்லக்கில் தரிசனம் தருகிறார். அஷ்டசித்திகளையும் கொண்ட அவளை பக்தர்கள் பல்லக்கு வாகனத்தின் போது தரிசித்தால் அஷ்ட சித்திகளையும் பெறலாம்.

**யானை (கஜ) வாகனம் :**

பிரம்மோத்ஸவத்தின் 5வது நாள் மாலை தாயார் தங்க யானையின் மீது திருவீதி உலா வருவார். கஜ படத்தை ஆரோ ஹணம் செய்த அன்றே பிரம்மோத்ஸவம் ஆரம்பமாகிறது. திருமலையில் பெருமாளுக்கு கருட சேவை எப்படி முக்கி யமோ, அதே போன்று இங்கே தாயாருக்கு 5வது நாள் யானை வாகன சேவை சிறப்பு பெறுகிறது.

பாற்கடலை கடைந்தபோது, மஹாலக்ஷ்மி தேவியுடன் ஐராவதமும் தோன்றியது. கஜம் என்றால் ஐச்வர்யம். “பாற்கட லில் தோன்றிய மஹாலக்ஷ்மிக்கு யானைகள் அபிஷேகங்கள் செய்து சேவிக்கின்றன” என்று கூறுகிறார் வேதாந்த தேசிகர்.

எட்டு திசைகளிலும் சுமையை சுமந்து அஷ்டதிக் கஜங்க ளாக இந்த யானைகள் பேறுபெற்றன. கலியுகத்தில் இந்த யானை எம்பெருமானும், தாயாரும் முதன்முறையாக சந்திப் பதற்கு ஏதுவாகின. முதலையிடமிருந்து தன்னை காப்பாற்று மாறு எம்பெருமானிடம் சரணாகதி அடைந்த கஜேந்திரன் பாக வத உத்தமன். கஜேந்திரனை போல் ஒவ்வொருவரும் எம்பெரு மானை சேவிக்க வேண்டும் என்று கூறுவதே கஜவாகன சேவை.

**சர்வ பூபால வாகனம் :**

பிரம்மோத்ஸவத்தின் 6வது நாளில் பத்மாவதி தாயார் சர்வ பூபால வாகனத்தில் திருவீதி உலா வருகிறார். அகில உலகுக்கும் அதிபதியான திருவேங்கடவனின் இதயத்தில் நிரந்தரமாகக் குடிகொண்டு, இவ்வுலகில் அருள் பொழிந்து கொண்டிருப்பவர் அலர்மேல் மங்கை தாயார். அனைத்து நதிக ளுக்கும் தலைவனான சமுத்திரராஜனின் மகளான அலர்மேல்

மங்கை தாயாரை சர்வ பூபால வாகனத்தின் போது தரிசிப்பவர்களுக்கு அரசாளும் தகுதியும் கிடைக்கும்.

**கருட வாகனம் :**

பிரம்மோத்ஸவத்தின் 6வது நாள் இரவு பத்மாவதி தாயார் கருட வாகனத்தில் திருவீதி உலா வருகிறார். நித்ய சூரிகளில் கருடன் முதன்மையானவன். *"வேதாத்மா விஹகேஸ்வர:"* என்று கூறப்படுகிறது. கருடனின் 2 இறகுகள் ஞான, வைராக்கிய சின்னங்களாக விளங்குகின்றன. வேங்கடவனுக்கும், தாயாருக்கும் நித்ய வாகனம் கருடாழ்வார். கருடனை "பெரிய திருவடி" யாகக் கூறுகின்றனர். பக்திக்கு பெயர்போன கருடன், தேவேந்திரனின் வஜ்ராயுதத்திற்கு இறக்கையை கொடுத்த பலசாலி. 108 திவ்ய தேசங்களில் கருட சேவைக்கு ஏராளமான சிறப்புகளும் உண்டு.

திருவேங்கடவனுக்கும் பத்மாவதி தாயாருக்கும் கருடாழ்வார் தாசனாகவும், ஆசனமாகவும், வாகனமாகவும் பலவிதங்களில் தினமும் சேவை செய்கிறார். அதனால் தாயாருக்கு நடக்கும் கருட சேவையை பக்தர்கள் தாசபக்தியாகப் பார்க்கின்றனர்.


**சூரியப்பிரபை வாகனம் :**

7வது நாள் காலையில் சூரியப்பிரபை வாகனத்தில் தாயார் திருவீதி உலா வருகிறார். இயற்கைக்கு முக்கியமான கடவுள் சூரியன். உலகத்திற்கு ஆரோக்கியத்தை வழங்கும் ஆயிரம் கிரணங்களால் உள்ளவன் சூரிய பகவான். பரமாத்மாவின் சூரிய மண்டலத்தில் இருப்பவன். ஆகையால் அவருடைய இதயத்தில் கொலுவீற்றிருக்கும் தாயாருக்கு "சூரியப்பிரபை" வாகனம் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திருச்சானூரில் சூரிய நாராயணனின் சாட்சியாக எம்பெருமான் தவம் செய்து பிறகு தாயாரை அடைந்தார். திருச்சானூரில் இன்றும் அனைத்து பூஜைகளையும் ஏற்றுக்கொண்டு சாட்சியாக வீற்றிருக்கிறார். சூரியப்பிரபை வாகன சேவையின் போது தாயாரை தரிசனம் செய்தால் ஆரோக்கியம், ஐச்வர்யம், நல்ல குழந்தைகள், ஞானம் ஆகியவை பரிபூரணமாகக் கிடைக்கும்.

**சந்திரப்பிரபை வாகனம் :**


7வது நாள் இரவு சந்திரப்பிரபை வாகனத்தில் தாயார் திருவீதி உலா வருகிறார். உபநிஷத்துகள் பணிப்பெண்களாக மாறி லோகமாதாவிற்கு சந்திரப்பிரபை வாகனமாக மாறி சேவை செய்கின்றனர். தன் சிரிப்பினால் ஸ்வாமிக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் அலர்மேல் மங்கைக்கு சந்திரன் வெண்மை, குளுமையான தன் கிரணங்களால் வாகனமாக மாறி சேவை























செய்கின்றான். "நீ சந்திரனில் வெண்மை, சூரியனில் அரசன், அக்னியில் தாகசக்தி, கல்யாண மூர்த்தி! லஷ்மீ தேவியே! உன்னை சேவிக்கிறேன்" என்று தாயாரை அகத்தியர் வர்ணிக்கிறார். இந்த வாகன தரிசனம் பக்தர் களுக்கு பக்தி, ஆரோக்கியம் என எல்லாவற்றையும் பிரசாதிக்கிறது.

### திருத்தேர் :

8வது நாள் காலையில் திருதேர் உத்ஸவம். வாகன சேவைகளில் தலை சிறந்தது திருத்தேர். ஆன்மா ரதசாரதியாகவும், சரீரம் ரதமாகவும், புத்தி சாரதியாக வும், மனது இழுக்கும் வடமாகவும், இந்திரியங்கள் (உடல் உறுப்புகள்) குதிரைகளாகவும் வீதிகளில் உலா வருகின்றன. இத்தரிசனமானது ஆன்மாவிற்கு ஆத்ம விவேகத்தை அளிக்கும்.

### குதிரை வாகனம் :

8வது நாள் இரவு தாயார் குதிரை வாகனத்தில் காட்சித் தருகிறார். குதிரை வேகமாக ஓடக்கூடியதும் அழகானதும் கூட. ஆதலால்தான் உபநிஷத்துக்கள் இந்திரியங்களை குதிரைகளாக வர்ணிக்கின்றன. வேண்டும் வரங்களை அளிக்கும் பத்மாவதி தாயார் குதிரை வாகனத்தில் பவனி வருகிறார்.

பத்மாவதி ஸ்ரீநிவாசன் முதல் சந்திப்பின்போது குதிரை சாட்சியாக இருந்ததாம். இந்த வாகனத்தில் தாயாரை சேவித்தால் கலிதோஷம் நீங்கும்.

### பஞ்சமி தீர்த்தம் :

இவ்வாலத்தில் பாஞ்சராத்ர ஆகம சாத்திர முறைப் படி அனைத்து கைங்கர்யங்களும் செய்யப்படுகின்றன. ஐந்து(பஞ்ச) விதமான சப்தம், ஸ்பரிசம், உருவம், ரஸம், வாசனை முதலான இந்த ஐந்து விஷயங்களில் மனிதனை நல்லவனாக்கி பரமனின் சேவையில் மகிழ வைப்பதே பாஞ்சராத்ர சாத்திரம். *''பாஞ்சராத்ரமேவ பாஞ்சராத்ரம்''*. ஐந்து இரவுகளில் லக்ஷ்மி, பிரம்மா, அனந்தன், கருடன், விஷ்வக்சேனன் இவர்களுக்கு சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் உபதேசித்த அர்ச்சனை முறை இது. இந்த பாஞ்சராத்ர சம்ஹிதைகள் 108 ஆக உள்ளது என மாமேதைகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பண்டிகை நாட்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. தன்னுடைய பட்டத்துராணிக்கு திருமலையிலிருந்து திருவேங்கடமுடையான் துளசி (திருத்துழாய்), மஞ்சள், குங்குமம், பட்டு வஸ்திரங்கள், நைவேத்தியங்கள் அனைத்தையும் யானை மீது ஊர்வ லமாக எடுத்து வந்து திருச்சானூரில் கோயில் மரியா தைகளுடன் வழங்குகிறார். புஷ்கரணியில் சக்கர ஸ்நானத்துடன் (தீர்த்த வாரியுடன்) இந்த நிகழ்ச்சி முடிவு பெறுகிறது. சக்கர ஸ்நானத்திற்குப் பிறகு ஆயிரக்கணக் கான பக்தர்கள் பத்ம சரோவரத்தில் புனிதநீராடுவர். பத்மசரோவரத்தில் பஞ்சமி தீர்த்த வேளையில் புனித நீராடினால் கோடி ஜன்ம புண்ய பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



# திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 23-11-2019 முதல் 01-12-2019 வரை

**23-11-2019**
சனிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**24-11-2019**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**25-11-2019**
திங்கட்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**26-11-2019**
செவ்வாய்க்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமந்தவாகனம்

**27-11-2019**
புதன் கிழமை
பகல் : பல்லக்கு உற்சவம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**28-11-2019**
வியாழக்கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**29-11-2019**
வெள்ளிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**30-11-2019**
சனிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**01-12-2019**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# பிரியவிரதன் கதை



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

பிரியவிரத மஹாராஜாவைப் பற்றிய செய்திகள் பாகவதத்தில் ஐந்தாம் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. சுவயம்புமனுவின் புத்திரர்களில் ஒருவரான பிரியவிரதன் தன் குருவான நாரத முனிகளின் அருள் ஆசியோடு பரமபக்தனாக விளங்கினான். மேலும், ஆத்ம ஞானம் உடையவனாகவும் திகழ்ந்தான். தந்தையின் சொல்லைத் தலைக்கொண்டு, தான் இந்த உலகத்தை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், தன் பக்திக்குக் குறை ஏற்பட்டு விடுமோ என எண்ணினான். அதனால், தந்தையின் கட்டளையை ஏற்றுக் கொள்ள அவன் மனம் விரும்பவில்லை. அப்பொழுது பிரியவிரதனை தந்தையின் கட்டளையை ஏற்று நடக்கச் செய்யும் பொறுப்பு பிரமதேவருக்கு ஏற்பட்டது. எனவே, பிரமதேவர் பிரியவிரதனைக் காண அவன் தவம் செய்யும் இடத்திற்கு வந்தார். பிரமதேவர் வருவதை அறிந்து பிரியவிரதன் உடனே இருக்கையை விட்டெழுந்து நின்றான். அதே போன்று, அப்பொழுது பிரியவிரதனிடம் பேசிக் கொண்டிருந்த சுவயம்பு மனுவும், நாரதரும் கூட எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தனர். அனைவரின் மரியாதையையும் ஏற்றுக்கொண்ட பிரமதேவர் பிறகு பிரியவிரதனுக்கு உபதேசம் செய்தார். அதன்பின் பிரியவிரதன் அவருடைய ஆக்ஞையை ஏற்றுக் கொண்டான்.

பிரமதேவனின் ஆக்ஞையை ஏற்று அதன்படி நடந்த போதும், உலக விவகாரங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட போதும் இறைவனின் நாமத்தை ஜபிப்பதை மாத்திரம் விடாமல் தொடர்ந்து செய்து வந்தான். உண்மையில் அவன் இவ்வுலகத்தை ஆளுவதற்கு ஒப்புக் கொண்டதே பெரியோர்களின் வார்த்தையைத் தட்டாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே ஆகும். அதன்பிறகு அவன் விஷ்வ கர்மாவின் பெண்ணான பர்கிஷ்மதி என்பவளை மணம் செய்து கொண்டான். அவள் மூலமாக வீர பராக்கிரமங்களிலும் குணசீலங்களிலும் தன்னை போன்று பத்து பிள்ளைகளையும், ஊர்ஜஸ்வதி என்ற பெண்ணையும் பெற்றான். பத்து பிள்ளைகளின் பெயர்கள் முறையே ஆக்னிதரன், இத்மஜிக்வன், யஞ்ஞபாகு, மகாவீரன், ஹிரண்ய ரேதஸ், கிருதப்பிரஷ்டன், சவனன், மேதாதிதி, வீதிகோத்ரன், கவி என்பவர்கள் ஆவர். இவர்களில் கவி, மகாவீரன், சவனன் ஆகிய மூவரும் பிறவி முதலே மெய்ஞான சிந்தனைகள் உடையவர்களாய் விளங்கினர். மேலும் இறைவனுடைய சரணார விந்தங்களிலேயே மனம் உடையவர்களாய் பிரமரிஷிகளாய் விளங்கினார்கள்.

பிரிய விரதன் இரண்டாவதாக வேறொரு பெண்ணை மணம் செய்து கொண்டு உத்தமன், தாமசன், ரைவதன் என்ற மூன்று பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் மூவரும் மன்வந்தரத்திற்கு அதிபதியானார்கள். ஒருமுறை பிரியவிரதனுக்கு சூரியன் மேல் மனவருத்தம் உண்டானது. அதற்குக் காரணம் சூரியன் தன் ரதத்தில் ஏறி மேரு

மலையை வலமாகச் சுற்றி வரும்போது பூமியின் ஒரு பக்கம் பகலாகவும் மற்றொரு பக்கம் இருளாகவும் இருந்தது. இவ்வாறாக இருப்பதை பிரியவிரதன் விரும்ப வில்லை. அதனால், பூமியின் எந்தப் பகுதி இருளாக உள்ளதோ அந்தப் பகுதியைப் பகலாக ஆக்குவதற்கு மிகவும் ஒளிமயமான ரதத்தில் ஏறிக் கொண்டு சூரியன் செல்லும் பாதையிலேயே தானும் சுற்றி வந்தான். அப்பொழுது உலகமெல்லாம் ஒளிமயமாகத் திகழ்ந்தது. தேவாதி தேவனை தியானிப்பதினாலேயே அவனால் அப்படிப்பட்ட அரிதான, அற்புதமான காரியத்தை செய்ய முடிந்தது. பிரியவிரதன் அப்படியாக தன் ரதத்தை சூரியனைப் பின் தொடர்ந்து சுற்றி வந்தபோது ரதச் சக்கரங்களால் உண்டாக்கப்பட்ட அடையாள பள்ளங் களே ஏழு சமுத்திரங்களாயின. அந்த சமுத்திரங்களால் சூழப்பட்ட பூமண்டலங்கள் ஏழு தீவுகளாக உண்டாயின.

அவை ஜம்புத்தீவு, பிலக்ஷதீவு, சால்மலி தீவு, குசதீவு, கிரௌஞ்ச தீவு, சாகத்தீவு, புஷ்கர தீவு என்னும் ஏழு தீவுகளாகும். அத்தீவுகள் ஒன்றைக் காட்டிலும் மற் றொன்று இரண்டு மடங்கு பெரியதாக இருந்தன. ஏழு சமுத்திரங்களில் ஒன்று உப்பு நீரைக் கொண்டதாகவும், இரண்டாவது கருப்பஞ்சாறு சுவையுடையதாகவும், மூன்றாவது மதுவால் நிரப்பப்பட்டும், நான்காவது நெய்யாலும், ஐந்தாவது பாலாலும், ஆறாவது தயிரா லும், ஏழாவது நன்னீராலும் சூழப்பட்ட சமுத்திரங்களாக விளங்கின. அந்த ஏழு தீவுகளும் இந்த ஏழு சமுத்திரங் களால் சூழப்பட்டிருந்தன. ஒவ்வொரு சமுத்திரமும் ஒவ்வொரு தீவின் அளவுக்கு சமானமானதாக இருந்தன. பிரியவிரதன் அத்தீவுகளை ஆட்சி செய்வதற்கு தன் பிள்ளைகளான அக்னிதரன், இத்மஜீக்வன், யஞ்ஞபாகு, ஹிரண்யரேதஸ், கிருதப்பிரஷ்டன், மேதாதிதி, வீதிகோத் ரன் என்ற தன் ஏழு பிள்ளைகளை நியமித்தான். தந்தை யின் கட்டளைப்படி அவர்கள் அனைவரும் அந்தந்த நாட்டிற்குத் தலைவர்களானார்கள். பிறகு பிரியவிரதன் தன் மகளான ஊர்ஜஸ்வதியை சுக்ராச்சாரியாருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அவர்களுக்கு “தேவயானி” என்ற பெண் பிறந்தாள்.

இவ்வாறு மிகவும் சிறப்பாக ஆண்டு வந்த பிரிய விரதன் எல்லாப் பொறுப்புகளையும் தன் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டு, ஆன்மீக மார்க்கத்தை அனுசரித்து உயர்வான பரமபதத்தை அடைந்தான்.

பாகவத கதை சாகரம் தொடரும்...


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும், ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.

**யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?**

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

**பெரியோர்கள் செய்ய வேண்டியன...**

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

**நிபந்தனைகள் :**

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.






# தி.தி.தே. ஆலய தரிசனம் (பாக்கேஜ் டூர்)



## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.100/–<br>ஏ.சி. –ரூ.150/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 6<br>(ஆறு) | காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் - திருச்சானூர்
2. ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - தொண்டவாடா
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - ஸ்ரீநிவாசமங்காபுரம்
4. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி
5. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.250/–<br>ஏ.சி. –ரூ.350/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 2<br>(இரண்டு) | காலை 8 மணிக்கு மற்றும் காலை 9 மணிக்கு |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் – கார்வேடி நகரம்
2. ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில் – நாகலாபுரம்
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – நாராயணவனம்
4. ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – அப்பளாயகுண்ட்டா
5. ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில் – நகரி
6. ஸ்ரீஅன்னபூர்ணி உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – புக்கை
7. ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் – சுருட்டப்பள்ளி

**மேலும் விவரங்களுக்கு**

**0877-2289123, 2289120 / 121, 9848007033**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

## திருப்பாணாழ்வார் வாழித்திருநாமம்...

திருப்பாணாழ்வார் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் உறையூரில் அவதரித்தார். இவர் அருளிய பிரபந்தம் அமலனாதிபிரானாகும்.

*"உம்பர் தொழும் மெய்ஞ்ஞானத்து உறையூரான் வாழியே*
*உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்த வள்ளல் வாழியே*
*வம்பவிழ்தார் முனி தோளில் வந்த பிரான் வாழியே*
*மலர்க்கண்ணில் வேறொன்றும் வையாதான் வாழியே*
*அம்புவியில் மதிளரங்கர் அகம் புகுந்தான் வாழியே*
*அமலனாதிபிரான் பத்தும் அருளினான் வாழியே*
*செம்பொன் அடி முடியளவும் சேவிப்போன் வாழியே*
*திருப்பாணன் பொற்பாதங்கள் செகதலத்தில் வாழியே"*

### பதவுரை

உம்பர் – நித்யஸூரிகள், தொழும் – வணங்கும், மெய்ஞ்ஞானத்து – உண்மை அறிவுடைய, உறையூரான் – உறையூரில் அவதரித்த திருப்பாணாழ்வார், வாழியே – வாழ வேண்டும். கார்த்திகையில் – கார்த்திகை மாதத்தில், உரோகிணி நாள் – ரோகிணி நட்சத்திரத்தில், உதித்த – தோன்றிய, வள்ளல் – வண்மையுடையவர். வம்பவிழ் – வாசனை வீசுகின்ற, தார் – மாலையை அணிந்த, முனி – லோகசாரங்கமுனிவர், தோளில் – திருத்தோளில், வந்த – ஏறிக் கொண்டு வந்த, பிரான் – பாண்பெருமாள். மலர்க் கண்ணில் – மலர்ந்த திருக்கண்ணினுள், வேறொன்றும் – வேறு எதையும், வையாதான் – வைக்கமாட்டாதவர். அம்புவியில் – அழகிய பூமியில், மதிளரங்கர் – மதிளால் சூழப்பட்ட கோயிலில் உள்ள பெருமாள், அகம் – கர்ப்பக்ரஹத்தில், புகுந்தான் – சேர்ந்தவர். அமலன் – தூயவனாய், ஆதி – உலகுக்குக் காரணமானவனாய், பிரான் – ஆழ்வார்க்கு உதவின அரங்கனைப்பற்றி, பத்தும் – பத்துப்பாட்டுக்களையும், –அருளினவர். செம் – சிவந்த, பொன்முடி – அழகான திருவடிகள் முதல், முடியளவும் – திருமுடி வரையிலும், சேவிப்போன் – சேவித்து இருப்பவர். திருப்பாணன் – வீணையும் கையுமாய் இருக்கிற திருப்பாணாழ்வார், பொற்பதங்கள் – அழகிய திருவடிகள், செகதலத்தில் வாழியே – இவ்வுலகில் வாழ வேண்டுவோமாக.

### சிறப்பு உரை

*(உம்பர் தொழும் மெய்ஞ்ஞானத்து உறையூரான்)*

ஞானம் – எம்பெருமானைப் பற்றிய அறிவு. மெய்ஞ்ஞானம் – எம்பெருமானுக்கு அடியவர்களான பாகவதர்களுக்கு அடிமையாயிருத்தல் பற்றிய அறிவு. *"அடியார்க்கு என்னை ஆட்படுத்திய"* என்று இவ்வாழ்வாரே அருளியமையால் மெய்ஞ்ஞானம் வெளிப்பட்டபடி. உம்பர் – நித்யஸூரிகள். நித்யஸூரிகள் தொழுதலாவது *"ரமாரமணோரஸ் ஸ்திதலாஞ்சநம்"* என்று திவ்யஸூரி சரிதத்தில் அருளியபடியே ஸ்ரீமந்நாராயணன் திருமார்பில் விளங்கும் ஸ்ரீவத்ஸத்தின் அம்சமானவராகையாலும்,


**வாசகர்களுக்கு அறிவிப்பு**

**பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும். நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

அரங்கன் திருவடிகளில் உட்புகுந்தவ ராகையாலும் நித்ய ஸூரிகள் தொழும் படியாயிற்று. இது பற்றியே வடிவழகிய நம்பி தாஸரும் ***''உம்பர் வாழ்த்தச் செப் பரிய பாண் பெருமாள்''*** என்று போற்றியுள் ளது காணலாம். அப்படிப்பட்ட திருப் பாணாழ்வார் அவதரித்த ஊர் உறையூ ராகும். திருமங்கையாழ்வார் பாடிய திரு மொழியில் ***''கோழியும் கூடலும்''*** என்று உறையூரைக் ***''கோழி''*** என்று குறிப்பிடு வர். கோழி, யானையை வென்றதாகக் கூறப்படும் இடமும் சோழராஜதானியு மாகிய உறையூர் என்பர். "உறையூர்" என்பது "உறந்தை" என்பதன் மருவு மொழி. நிசுளாபுரி என்றும் பெயர். இவ் வூரில் பகவத் பக்தனான தர்மவர்மா என் னும் அரசனுக்கு நீளாம்சையான உறை யூர் நாச்சியார் திருவவதரித்து அழகிய மணவாளனை மணந்து கொண்டாள். திரு உறைந்த காரணம் பற்றி இத்திருப் பதிக்கு திருவுறையூர் என்றும் திருநாம மாயிற்று. திருவரங்கநாதனே அழகிய மணவாளக் கோலமாக இத்தலத்தில் எழுந்து இருத்தலால், பிள்ளை பெரு மாள் அய்யங்கார் நூற்றெட்டு அந்தாதி யில் ***''அரங்கா திருவாழ் உறந்தையாய்''*** என்று சேர்த்துக் கூறினார். மேலும் ***''ஓங்கு முறையூர் பாணனூர்'***' என்று மாமுனிகள் உரைப்பர். உறையூருக்கு ஒக்கமாவது – எம்பெருமான் திருமார்பில் ஸ்ரீவத்ஸ அம் சமாதலால் மார்பிலுள்ள பிராட்டிக்கு அடிமையாயிருக்கும் தன்மைக்குத் தக்க படி உயர்ந்த குலத்தையுடையவர் அவத ரித்ததால் வந்த உயர்த்தி என்பர். மேலும் ***''கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலர்''*** என்று திருமங்கையாழ்வார் அருளியபடியே ஸர்வேச்வரன் உகந்து இருக்கும் திருப்பதியாய், ***''திருவாழ் உறந்தை''*** என்றும், ***''உறையூர் வல்லி யார்''*** என்றும் அடையாளமாம் படி பிராட்டிக்குப் பிறப்பிடமாகையாலும் வந்த உயர்த்தியாகும். இப்படிப்பட்ட பெருமையுடைய ஊராயிற்று திருப்பாணாழ்வாருடைய அவதார தலம். இத்தலம்தான் காவிரியில் எம்பெருமானார் நீராடும் துறைக்கு எதிர்த் துறையாய் இருப்பது எதிர்விழி கொடுக்கைக்குப் பாங்கான தேசமாயிருக் கிறது என்று சுவைபட உரைப்பர் பிள்ளைலோகம் ஜீயர். எனவே உறையூ ரான் என்றபடி. உறையூரில் ஒரு பிராம்மணனுடைய வயலில் நெற் கதி ரில் ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவின் அம்சமாகத் தோன்றியவர்.

*(உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்த வள்ளல்)* – கார்த்திகை யில் ரோகிணி நாள் திருப்பாணாழ்வார் தோன்றுகையாலே கடவுள் நம்பிக்கையுடையவராலே விரும்பத்தக்கதாய் கொண்டாடப்படுமதான நாள் என்பர். (உரோகிணி நாள்) உரோகிணி – 27 நட்சத்திரங்களில் நான்காவது. இந்நாளுக்குப் பெருமையாவது – கண்ணன் அவதரித்த திருநட்சத்திரமாய் இருக்கும். இவ்வாழ்வாருக்கு ***''கோவலனாய் வெண் ணெய் உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை''*** என்று அரங்கனே கண் ணனாய் இருந்து வெண்ணெய் உண்டது பற்றிய மன நாட்டம் இருந்தது குறித்து திருநட்சத்திரமும் ரோகிணியாயிற்று. அதுமட்டுமின்றி இராமாநு சருக்கு ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பியும் வைகாசி ரோகிணியில் அவதரித்தவராகையாலே முப்புரியூட்டிய நாள் என்பர். மேலும் ***''வாய்த்த புகழ்ப்பாணர் வந்துதிப் பால்''*** என்பர் மாமுனிகள். வாய்த்த புகழாவது – இயல்பான அடிமைக்குத் தக்கதான தாழ்ச்சியை பிறவியால் நிச்சியமாக

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 39க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கோ | வி | லூ | ர் | 2 தி | ரு | ப் | ப | 3 தி |
| ரு | ம் | 4 ஸ்ரீ | 5 ப | ஞ் | ச | வ | ன் | கா | டு | | ரு |
| ப் | த | ர | த் | | ன் | ரீ | கை | | | ம் | ச் |
| பு | யு | ங் | மா | ளி | ண | கி | பி | பை | | வ | சி |
| லி | ரா | க | வ | பொ | ர் | க் | ம் | ப் | 6 ம | த | ற் |
| யூ | க் | ம் | தி | ட் | 7 க | ய | கா | ர் | றை | ரா | றா |
| ர் | 8 ச | யா | வி | 9 த | 10 வே | 11 ஹ | 12 மூ | 13 த | ம | பு | று |
| 14 கி | ரு | ஷ் | ண | தே | வ | ரா | ய | ர் | ல | ம் | |
| | | ம் | ர | க | க் | ச | ன | ச | ர் | 20 த | 15 சு |
| 16 மோ | கி | னி | அ | வ | தா | ர | ம் | | | | |
| | 17 நி | த் | தி | ய | பூ | ஜை | க | ள் | | | |
| 18 தி | ட் | ட | க் | கு | டி | | ம் | ண | வோ | ரு | 19 தி |

வுடையவராகையாலே ஸ்ரீலோக ஸாரங்க முனிகளுடைய தலையிலே வாகனராம்படி பண்ணி, ஏற்றியருளின புகழ். (உதித்த) அரங்கன் அண்டர்கோனாகையால், அவரைப் பாடுகைக்காக பரமபதத்தில் இருப்பவர்களில் ஒருவர் இங்கே அவதரித்தார் என்னும்படி அவதரிக்கையால் "உதித்த" என்றபடி. (வள்ளல்) "இந்த முக்தன் ஸாம வேதத்தைப் பாடிக் கொண்டு இருக்கிறான்" என்று தைத்திரீயோபநிடதம் கூறினபடியே முக்தர் செயலை இங்கே பெரிய பெருமாள் திறத்திலே வாக்கின் தொழிலாக பிரபந்தத்தை ஆழ்வார் அருளியதால் வள்ளல் என்றபடி.

(வம்பவிழ்தார் முனி தோளில் வந்த பிரான்) முனி– அரங்கனையே மனனம் செய்பவர் – லோகசாரங்க முனி. அதனால் *''முமலமும் அற்ற நீதி முனி வரன்''* என்பர் வடிவழகிய நம்பி தாஸர். அதாவது உயர்குடிப்பிறப்பு, கல்வி, செல்வம் ஆகிய மூன்று வித கர்வமும் இல்லாதவர் என்றபடி. அரங்கனுக்குத் தினமும் விடிவு காலத்தே காவிரியில் நீராடி நித்ய கர்மாநுஷ்டானங்கள் செய்து திருமஞ்சனக்குடம் எடுத்துக் கொண்டு குடை, சாமரம், விசிறி முதலானவற்றோடு எல்லா வாத்யகோஷத்தோடு பெருமாள் ஸந்நிதிக்குச் செல்வர். அதே சமயம் திருப்பாணாழ்வார் நாள்தோறும் காவேரியின் தென்கரையில்



திருவரங்கம் திசை நோக்கி தூரமாய் நின்று கையும் வீணையுமாய் நம்பாடுவானைப் போலே அழகிய மணவாளனின் கல்யாண குணங்களைப் பாடிக் கொண்டிருப்பார்.

ஒரு நாள் மெய்மறந்து யாழ் வாசித்துக் கொண்டிருந்த போது திருமஞ்சன தீர்த்தம் எடுத்துப் போக வந்தவர் அவரை விலகிப்போ என்று சொல்லியும் நகராததால் கல் வீசி அடித்தார். அந்த அபசாரத்துக்காகவே பெரிய பெருமாள் பாணரை ரக்ஷிக்க விரும்பி அவரைப் போலே தம்மை எப்போதும் மனத்தாலே நினைப்பவரான லோக சாரங்க முனிவரின் கனவில் தோன்றி "அந்தணரே! என்னுடையவரான திருப்பாணாழ்வாரைத் தாழ்ந்தவராக எண்ணாதீர். பக்தியுடன் அவரை உமது தோள்களில் சுமந்து என்னருகில் அழைத்து வாரும்" என்று நியமித்தார். ஆச்சர்யமான அந்தக் கனவினை உண்மை என்று உறுதி கொண்டு சாஸ்த்ர முறைப்படி ஸ்நானம் செய்து தூயவராய், திருமண்காப்பு அணிந்து கொண்டார். தாமரை மணிமாலைகள் முதலியவற்றை அணிந்து கொண்டார். இதுபற்றியே *''வம்பவிழ்தார் முனி''* என்றபடி. பாணரிடம் அரங்கனின் கட்டளையைச் சொன்னார். பாணர் *''அடிப் பாணன் அடிப்பாணன்''* என்று பின்வாங்கிய போது, முனிவர், "பெரியவரே! – திருவரங்கன் ஆணைப்படியே செய்வீர். திருவரங்கனின் ஆணையை நாம் இருவரும் மீறக் கூடாதன்றோ" என்றார்.

பாணரும் ஸர்வ பாரத்தையும் எம்பெருமானிடமே ஒப்படைத்து முனிவர் வசம் வந்து கருடன் திருவரங்கனை தோளில் ஏற்றிக் கொள்வது போல, பாணரை தம் தோளில் ஏற்றிக் கொண்டார். அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் தாம் அருளிய ஆசார்ய இருதயத்தில் (85) *''போக மண்டபத்தில் வீணையும் கையுமான அந்தரங்கரை மஹாமுனி அநுவர்த்தித்த க்ரமும்''* என்கிறபடியே திருவரங்கன் பெரிய கோயிலிலே வீணையும் கையுமாய்ப் பெருமாளுக்கு அந்தரங்கராய் ஒழிகிப் போந்த திருப்பாணாழ்வாரை லோகசாரங்கமகாமுனிவர் சார்ந்த முறையினால் பிறவியின் உயர்வு தாழ்வு தெரியும் என்பர். அடியவரான முனிவருக்கு பாணரான தன்னை ஆட்படுத்திக் கொண்டது பற்றி "பிரான்" என்றபடி. பிரான் – உபகாரகன். இங்கு முனிவர் தோளிலிருந்து அரங்கனைப்பாடி நமக்கு அமலனாதிபிரான் என்னும் பிரபந்தத்தை உபகரித்தவராகையாலே பிரான் எனத் தகும்.

வாழித்திருநாமம் வளரும்...

# 108 திவ்விய தேசவைபவம்







# திருக்கோவலூர்

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

ம்ருகண்டு மஹரிஷி, (மார்க்கண்டேயரின் புத்ரர்) த்ரிவிக்ரமாவதாரத்தைத் தரிசிக்க விரும்பி, பற்பல திவ்ய தேசங்களுக்கு யாத்திரையாகத் தன் பத்தினியுடன் செல்லும்போது, நாரதரின் அறிவுரையால், கிருஷ்ண பத்ரா என்கிற தென்பெண்ணை ஆற்றின் கரையில், கிருஷ்ணாரண்யம் என்கிற வனத்தில், கிருஷ்ணபுரி என்கிற இத்தலத்துக்கு வந்து, இங்குள்ள கோபாலனை நோக்கித் தவம் செய்ய, அவர், திருமகளுடன் நள்ளிரவில் ரிஷியின் முன்பு வயோதிகர்கள் வடிவில் வந்து அன்னம் வேண்டினார்கள். ரிஷி பத்தினியும், தன்னுடைய பதிவ்ரதா மகிமையால், மகாலக்ஷ்மியைத் துதித்து அன்னம் முதலியவற்றைப் பெற்று அவர்களுக்கு அளிக்க, பகவான் மகிழ்ந்து, பிரசன்னமாகி, மண்ணுக்கும் விண்ணுக்குமாக வளர்ந்து, த்ரிவிக்ரமனாகவும் சேவை சாதித்தார். ரிஷியின் தவம் செய்யுமிடத்தின் இடைகழியில் இப்படி சேவை. ஒரு மாறுதல்..... வலது திருக்கரத்தில் சங்கு, இடது திருக்கரத்தில் சக்ரம். ரிஷியும், அவர் பத்தினியும் கண்ணாரத் தரிசித்து, எப்போதும் இதே இடத்திலேயே இருந்து, தங்களுக்கு சேவை சாதிக்குமாறு வேண்ட, அந்த ரேழியே(இடைகழி) கோயிலின் கர்ப்பக்ருஹமாயிற்று. கோபாலன், த்ரிவிக்ரமனாக ஆனான். கோபாலன் என்கிற பெயரே கோவலன் என்று ஆயிற்று.

காவலர் மற்றும் பல ரிஷிகள் இத்தலத்தில் தவம் செய்யும்போது, பாதாளகேது என்கிற அசுரன் அவர்களைத் துன்புறுத்த, அவர்கள், இவ்வெம் பெருமானை வேண்ட, பகவான், குச த்வராஜன் என்கிற அரசன் மூலமாக, அசுரனை அழித்து, முனிவர்களைக் காத்ததாகச் சொல்வர்.

இத்தலத்து எம்பெருமான், நாலாயிர திவ்ய பிரபந்தத்தை, இங்கிருந்து பெருகச் செய்யத் திருவுள்ளம் கொண்டு, காஞ்சியிலிருந்து பொய்கை ஆழ்வாரையும், கடல் மல்லையிலிருந்து பூதத்தாழ்வாரையும், மயிலையில் இருந்து பேயாழ்வாரையும் இங்கு வருமாறு செய்து, மகரிஷியின் இடைகழியில் ஒவ்வொருவராக உள்ளே வரச்செய்து, வெளியே கொட்டுகின்ற நள்ளிரவு மழை நேரத்தில், அச்சிறிய இடத்தில் தானும் வந்து அவர்களை மிகவும் நெருக்கி, அவர்கள் அருளிய பாசுரங்களை அனுபவித்தான். இவன் “தேஹளீசன்” எனப்பட்டான். அஷ்டாக்ஷரம், த்வயம், சரமசுலோகம் மூன்றின் பொருளையும், இந்த முதலாழ்வார்கள் மூவரும் மூன்று அந்தாதிகளாகப் பாட, அவற்றை வெளிக்கொணர்ந்த சிறப்புடையவன், தேஹளீசன்.

பத்ம புராணத்தில், இந்திரன், துர்வாச முனிவரின் சாபத்தால் எல்லா செல்வங்களையும் இழந்து, இங்கு வந்து, சக்ர தீர்த்தக் கரையில் தவம் செய்து, இவ்வெம் பெருமான் அருளால், எல்லா செல்வங்களையும் திரும்பவும் பெற்றான் என்று உள்ளது.



ஓம் வஸுதாயை நம:

| | | |
|---|---|---|
| பெருமாள் | – | மூலவர் : த்ரிவிக்ரமன், வலது திருவடியை வானத்தை நோக்கி உயரே தூக்கிய நிலையில், கிழக்கே திருமுக மண்டலம், வலது கரத்தில் சங்கும், இடது கரத்தில் சக்ரமும் ஏந்திய நிலை. |
| உத்ஸவர் | – | ஆயனார், கோபாலன் (கோவலன்) |
| தாயார் | – | புஷ்பவல்லித் தாயார், பூங்கோவல் நாச்சியார். |
| தீர்த்தம் | – | பெண்ணை நதி, கிருஷ்ண தீர்த்தம், சக்ர தீர்த்தம். |
| விமானம் | – | ஸ்ரீகர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | – | மஹாபலி, ம்ருகண்டு ரிஷி, பிரம்மன், இந்திரன், குக்ஷி, சௌநகர், காச்யபர், காவலர் ரிஷிகள், குசத்வஜன் என்கிற அரசன், முதல் மூன்று ஆழ்வார்கள். |
| ஆகமம் | – | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – | முதல் மூன்று ஆழ்வார்களும், திருமங்கை ஆழ்வாரும் |

**சிறப்பு :**

பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்களில் சேர்ந்தது. கிருஷ்ணாவதாரத்துக்கு முன்பு யசோதைக்கு அவதரித்த மாயை என்கிற துர்க்கை, இந்தக் கோவில் அர்த்த மண்டபத்தில், திருக்கோவலூர் ஆயனைப் பாதுகாக்கும் விதமாகக் குடி கொண்டு இருக்கிறாள். திருமங்கை மன்னன் *''கற்புடைய மடக்கன்னிக் காவல் பூண்ட கடிபொழில் சூழ் நெடுமருகில்...''* என்று இத்துர்க்கையைப் பாடி இருக்கிறார். தினமும், திவ்ய தம்பதிகளுக்கு நிவேதனம் ஆனதும், அடுத்தது துர்க்கைக்குத் தான். ஸ்ரீஉடையவர் ஸ்தாபித்த 74 ஸிம்ஹாசனாதிபதிகளில், திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயரும் ஒருவர். அவரது கட்டுப்பாட்டில் இத்தலம் உள்ளது.

ஸ்வாமி தேசிகன் “தேஹளீச ஸ்துதி” என்பதாக அருமையான ஸ்தோத்ரம் அருளி இருக்கிறார்.

**த்யான ச்லோகம்**

*“ஏகேநஸ்வபதா ஸமஸ்த வஸுதாம் மாத்வாத்வதீயேநகம்,*
*மாதும் சத்ரிதிவே ஸமுத்த்ருத்பத: புஷ்பாலயாவல்லப: |*
*பண்ணா தீர்த்த தடே த்ரிவிக்ரமஹரி : லக்ஷ்ம்யால யாக்யே புரே,*
*பூர்வாசா வதநோ ம்ருகண்டுவரத: ஸ்ரீதாக்யவைமாநிக: ||*

-------

*“விக்ரம்ய யேந விஜிதாநி ஜ கந்தி பூம்நா*
*விஸ்வஸ்ய யம் பரம காரண மாமநந்தி*
*விஸ்ராணயந் ப்ரணயிநாம் விவிதாந் புமர்த்தாந்*
*கோப்தா ஸ மே பவது கோபபுராதி ராஜ:*

-தேஹளீச ஸ்துதி

--------

**பாசுரம்**

*“வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய*
*சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடராழி நீங்குகவே என்று”*

– பொய்கை ஆழ்வார்

*“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக*
*இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி*
*ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு*
*ஞானத் தமிழ் புரிந்த நான்”*

– பூதத்தாழ்வார்

*“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்*
*பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்*
*என்னாழி வண்ணன்பால் இன்று”*

– பேயாழ்வார்

*“தூவடிவின் பார்மகள்பூ மங்கையோடு*
*சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்ற*
*காவடிவின் கற்பகமே போல நின்று*
*கலந்தவர்கட் கருள் புரியுங் கருத்தி னானை*
*சேவடிகை திருவாய்கண் சிவந்த ஆடை*
*செம்பொன்செய் திருவுருவ மானான் தன்னை,*
*தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு*
*திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே”*

– திருமங்கை ஆழ்வார்

*“தாமரையான் ஆதியாய்த் தாவரங்கள் ஈறான*
*சேம உயிரும், செகம் அனைத்தும் - பூ மடந்தைக்கு*
*ஆம் கோ அலாயுதன் பின்ன அவதரித்த*
*பூங்கோவல் ஆயன் பொருள்”*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**ஓம் வஸுதாரிண்யை நம:**

## சிறுவர் பகுதி விடைகள்

1. ஸ்ரீதயாசதகம்
2. ஸ்வாமி விளாஞ்சோலை பிள்ளை
3. திருக்குருகை பிரான் பிள்ளான்
4. 1)ஸ்ரீபராசர பட்டர், 2) ஸ்ரீவேதவியாச பட்டர்
5. 1) திருநறையூர் (நம்பி), 2) திருக்கண்ண புரம் (சௌரிராஜப் பெருமாள்)
6. அப்புள்ளார்
7. திருவாய்மொழிப் பிள்ளை
8. தீர்த்தப்பிள்ளை
9. சுதப்ரகாசிகை
10. வரதாச்சார்யர்

தொகுப்பு : ஜெ. நந்தகோபால், அரும்பாக்கம்.

**நாமாக்கள்**

371. *ஓம் மஹா பாகாய நம:*
(சிறந்த போகங்களை அனுபவிப்பவனே)
*ஓம் விலாஸப்ருவே நம:*
(அழகாக அசைந்து நெளியும் புருவமுடையவளே)

372. *ஓம் வேகவதே நம:*
(மிகுந்த வேகமுள்ளவனே)
*ஓம் ஸுகவாண்யை நம:*
(கிளியின் குரலை உடையவளே)

373. *ஓம் அமிதாசநாய நம:*
(இந்திரனுக்களித்த அதிக அன்னத்தை உண்டவனே)
*ஓம் கலாவத்யை நம:*
(நற்கலைகளில் வல்லவளே)

374. *ஓம் உத்பவாய நம:*
(சம்சாரப் பற்றை விலகச் செய்பவனே)
*ஓம் ருஜுநாஸாயை நம:*
(நேராக நிமிர்ந்த நாசியை உடையவளே)

375. *ஓம் க்ஷோபணாய நம:*
(பிரளயம் முடிந்து, எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கும் போது, அவற்றைக் கலக்குபவனே)
*ஓம் கலரவாயை நம:*
(இனிமையான குரலை உடையவளே)

376. *ஓம் தேவாய நம:*
(ஸ்ருஷ்டி லீலைகளைச் செய்பவனே)
*ஓம் வராரோஹாயை நம:*
(அழகான இடுப்பை உடையவளே)

377. *ஓம் ஸ்ரீகர்ப்பாய நம:*
(ஸ்ரீயைக் கர்ப்பத்தைப் போல் காப்பவனே)
*ஓம் தலோதர்யை நம:*
(உள்ளங்கை அளவு திருவயிறு வாய்த்தவளே)

378. *ஓம் பரமேஸ்வராயை நம:*
(எல்லாவற்றுக்கும் மேலான ஈச்வரனே)
*ஓம் ஸந்த்யாயை நம:*
(அழகான அங்க இணைப்புள்ளவளே)

379. *ஓம் கரணாய நம:*
(பக்தர்கள், தன்னை அடையத் தானே காரணமானவனே)
*ஓம் பிம்பாதராயை நம:*
(கொவ்வைச் செவ்வாய் உடையவளே)

380. *ஓம் காரணாய நம:*
(தானே எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பவனே)
*ஓம் பூர்வ பாஷிண்யை நம:*
(சரணம் அடைந்தவர்கட்கு தைர்யம் சொல்லி, பகவானுக்கு முன்பாக அருள்பவளே)

*ஸ்ரீமதே ஸுந்தரகோபபுரீ தேவீ புஷ்பவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீத்ரிவிக்ரம பரப்ரஹ்மணே நம:*

இத்தலம் கடலூர் – சித்தூர் பஸ் மார்க்கத்தில் உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

### 73. சாஸ்த்திர நீதிகள் :

ஜநிதா சோ உபநீதா ச
யச்ச வித்யாம் ப்ரயச்யதி |
அன்ன தாதா பய த்ராதா
பஞ்சைதே பிதர: ச்மிருதா: ||

தன்னைப் பெற்று, உபநயனம் செய்வித்து 'ப்ரும்மோபதேசம்' செய்து வைத்தவரும், படிப்பதற்கு உதவி செய்து காப்பாற்றியவரும், துணிமணிகள், வாங்கி தந்து அன்னமிட்டு சிறிய வயதிலே காப்பாற்றியவரும், பயத்தை ஒழித்து நல்லதையே சொல்லிக் கொடுப்பவரும் தகப்பனே! அவர்களை முதுமை காலத்தில் நன்கு போஷித்து வர புண்ணியம் கிடைக்கும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.




# மனதினை கட்டுபடுத்துவதற்கான வழி

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

சிறு குழந்தை முதல் வயதானோர் வரை ஒவ்வொருவரையும் பிடித்து துன்புறுத்துவது மனதளவிலான கவலைகளேயாகும். சாதாரணமாக ஒவ்வொருவரிடமிருந்தும் கேட்கக் கூடியது மனதினை குறித்தேயாகும். முக்கியமாக இன்றைய நாட்களில் மனதளவிலான கவலைகள் மிகவும் அதிகரித்து வருகிறது. அனைவரும் இதற்கு மனஅழுத்தம் எனும் புதிய பெயரை சூட்டியுள்ளனர். பண்டை காலத்தில் இதனை மனதளவிலான நெருக்கடி என்றனர். முக்கியமாக இது மாணவர்களுக்கு தேர்வு நேரங்களிலும், நேர்முகத் தேர்வு நேரங்களிலும் நுழைவுத் தேர்வு சமயங்களிலும், விளையாட்டு போட்டிகளிலும் உண்டாகிறது.



ஆனால் இந்த மன அழுத்தம் புதியதல்ல. பகவத் கீதையில் இதனை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. பகவத் கீதையில் இவ்விவாதம் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனன் இடையே நடைபெற்றது. அதாவது அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரிடம் உரையாடும்போது மன அடக்கம் மிகவும் கடினம் என்றும், அதனை கடைபிடிப்பது என்பது காற்றை தடுப்பது போன்று கடினமானது என்றும் தெரிவித்தான். காற்றை தடுத்து நிறுத்த எவராலும் முடியாது. அது போன்றே மனதினை கட்டுப்படுத்துவதும் மிகக்கடினம் என்று அர்ஜுனன் கூறினான்.

அதற்கு கீதாசார்யர் மனதினை கட்டுப்படுத்த ஒரு அற்புதமான வழியினை தெரிவிக்கிறார்.

"ஸ்ரீகிருஷ்ண பகவான் இவ்வாறு கூறுகிறார்: நீண்ட புஜங்களையுடைய அர்ஜுனா! சந்தேகமின்றி மனம் சஞ்சலமானது தான். இதை வசப்படுத்துவது கடினம் தான். ஆனால் பயிற்சியினாலும் வைராக்கியத்தாலும் மனதை வசப்படுத்த முடியும்" – பகவத் கீதை 6.35.

மனதானது சஞ்சலமுடையதே என்று சாக்ஷாத் எம்பெருமானே அங்கீகரிக்கின்றார். இது அனைவரின் அனுபவமுமாகும். மனதானது ஒரு நொடிப்பொழுதும் அமைதியாக இருக்காது. உண்மையில் மனது என்றால் என்ன? அது சாதாரணமான ஆலோசனையின் தொடராகும். "நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பதினை ஊகிப்பவை" என மூன்று விதமான ஆலோசனைகளை உடையது. இம்மூன்று செயல்களிலேயே மனதும் இருக்கும். கடந்தவைகளை நினைத்துக் கொண்டே மனதளவில் பாதிப்படைவது. நடக்க இருப்பதனை ஊகித்துக் கொண்டு பயந்துக் கொண்டே இருப்பது. உண்மையில் அது தற்போதைய நிகழ்வுகளை அருகில்

வைத்து விடுகின்றது. அதாவது அது ஒவ்வொரு நொடியும் அங்கும் இங்குமென்று ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

பழைய நிகழ்வுகளை நினைத்துக் கொள்வதால் நஷ்டம் என்ன உள்ளது அல்லது எதிர்காலத்தை குறித்த கற்பனைகளால் நஷ்டம் என்ன உள்ளது எனும் கேள்விகளால் பயன் ஏதும் இல்லை. ஏனெனில் கடந்த காலத்தில் நடந்த துன்பங்களை நினைத்து வருந்துவதால் மன அழுத்தம் அதிகரிக்கின்றது.

அதேபோன்று எதிர்காலத்தில் ஏதோ ஆபத்து உண்டாகப் போகின்றது என பயப்பட்டால் பதற்றம் அதிகரிக்கின்றது. இவற்றினால் மானிடரில் உற்சாகம், சக்தி, தன்னம்பிக்கை இவையாவும் குறையுமே தவிர அதிகரிக்காது.

ஆதலால் தான் இவ்விதமான கடந்த கால நிகழ்வுகளையும், எதிர்காலத்தை குறித்த கற்பனைகளையும் குறித்து காலத்தை கழிப்பதனால் எவ்வித லாபமும் இருக்காது. ஆனால் இவையாவும் எளிதில் சாத்தியமாகக் கூடியதன்று. ஆதலால் பயிற்சியும் வைராக்கியமும் கண்டிப்பாக இருத்தல் வேண்டும் என கீதாசார்யர் கூறுகின்றார்.

எனவே மாணவர்கள் செய்ய வேண்டிய பயிற்சி என்ன? அதே போன்று அவர்கள் சாதனை புரிய செய்ய வேண்டிய வைராக்கியமென்ன? மாணவர்கள் செய்ய வேண்டிய பயிற்சி இலட்சயத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல், அந்த இலட்சயத்தை நிச்சயமாக சாதிப்பேன் என்று மீண்டும் மீண்டும் கூறுதல் வேண்டும். எப்பொழுது இலட்சயம் இல்லையோ மனிதனும் காலியாகவே இருப்பான். இலட்சய சாதனைக்கு தடையாக இருக்கின்ற தேவையற்ற செயல்களை உடனே விடுவதே வைராக்கியமாகும்.

இதுபோன்ற பயிற்சி, வைராக்கியம் வாயிலாக மாணவர்கள் மிக விரைவிலேயே மன அழுத்தத்திலிருந்து விடுபடுகின்றனர். வெற்றிகளை சாதிக்கின்றனர். அப்பொழுது வாழ்க்கையும் ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும், ஐச்வர்யமாகவும் அமைகின்றது.

பகவத்கீதை தொடரும்...


### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## சர்வ தரிசனம் டோக்கன்

- நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிப்பதற்கு “சர்வதரிசனம் டோக்கன்” முறையினை அமல்படுத்தப்பட்டுள்ளது.
- க்யூ வரிசையிலும், கம்பார்ட்மெண்ட்டிலும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.
- சர்வ தரிசனம் டோக்கன்கள் பெறுவதன் மூலம் நிர்ணியிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிக்கலாம்.
- திருமலையிலும் இந்த டோக்கன்கள் வழங்கப்படுகிறது.
- திருப்பதியில் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள விஷ்ணு நிவாசம், இரயில் நிலையத்திற்கு பின்புறமுள்ள கோவிந்த ராஜ ஸ்வாமி 2,3 சத்திரங்கள், ஸ்ரீநிவாசம், அலிபிரியில் உள்ள பூதேவி கட்டிடத் தொகுதி, ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் உள்ள கௌண்ட்டரில் பக்தர்கள் இலவசமாக சர்வ தரிசனம் டோக்கன்கள் பெற்றுக் கொள்ளலாம்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆதார் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். ஆதார் அட்டை இல்லாத பட்சத்தில் வாக்காளர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.
- டோக்கன்கள் பெற்ற பக்தர்கள் டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நாராயணகிரி கார்டனை அடைந்து திவ்ய தரிசன கட்டிடத் தொகுதி வழியாக ஸ்வாமியை தரிசனம் செய்யலாம்.
- இடைப்பட்ட காலத்தில் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், அப்பளாயகுண்ட்டா போன்ற தி.தி.தே. ஆலயங்களுடன் பிற புண்ணிய திருத்தலங்களையும் தரிசியுங்கள்.
- ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இல்லாத பக்தர்கள் வழக்கம் போல் வைகுண்டம் கட்டிடத் தொகுதியில் காத்திருந்து ஸ்வாமியை தரிசிக்கலாம்.

– செயலாட்சித்தலைவர்.

தொடர்

# ஆயுர் வேதம்

# நல் உணவே மருந்து










தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. பா. காயத்ரி,
9744657115


*"ஆஹாரம் ஸம்பவம் வஸ்து: ராகஸ்சாஹார சம்பவ:"* என்று சரக சம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. உணவால் மனித உடம்பு வளர்கிறது. அதே உணவால் தான் உடம்பில் நோய்களும் உண்டாகின்றன. எனவே நம் ஆரோக்கியத்தை அதிகரிக்க உணவை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இப்போது நம்முள் அடிக்கடி எழும் சில சந்தேகங்களுக்கான பதிலைக் கீழே காண்போம்.

**1) உணவில் உப்பு சேர்ப்பதை தவிர்ப்பது உடலுக்கு நல்லதா?**

அதிக ரத்த அழுத்தம், கொழுப்பு மற்றும் சிறுநீரகக் கோளாறுகள் உள்ளோர் உப்பு உட்கொள்வதை வெகுவாக குறைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக ஆரோக்கியமானவர்கள் உப்பு உட்கொள்வதை தவிர்க்கக் கூடாது. சாதாரணமாக மனிதர்கள் உட்கொள்ளும் காய்கறிகள், கீரைகள் மற்றும் பல உணவு பொருட்கள் மூலம் போதுமான அளவு சோடியம் உடலுக்கு கிடைப்பதாக நம்புகின்றனர். ஆனால் உடலுக்கேற்றபடி தினமும் 3–4 கிராம் உப்பு மனிதன் உட்கொள்ள வேண்டும் என்று அறிவியல் கூறுகின்றது.

**2) காய்கறிகளை சமைத்து சாப்பிடலாமா?**

குறிப்பிட்ட சூட்டில் சமைத்த காய்கறிகளை சாப்பிடலாம். ஆனால் அதிக சூட்டில் சமைத்த அல்லது வறுத்த காய்கறிகள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். பாகற்காய், சுரைக்காய் முதலிய காய்கறிகளை, சத்துக்கள் அடங்கிய அதனுடைய தோலுடன் உட்கொள்ள வேண்டும்.

உருளைக்கிழங்கு, ஆண்டு முழுதும் கிடைப்பதால், நிறைய நாட்கள் வைக்கக் கூடியதால், மலிவான விலையில் கிடைப்பதால் அனைத்து இல்லங்களிலும் தினசரி உணவாக பயன்படுத்தப்படுகிறது. உருளைக் கிழங்கை தோலுடன் சாப்பிட வேண்டும். அதனால் செரிமான சக்தி அதிகரித்து சர்க்கரை நோய், கொழுப்பு முதலிய நோய்களும் குறையும். சில காய்கறிகளை சமைக்காமல் சாப்பிட முடியாது.

சிலவற்றை சமைத்தால் அதிலுள்ள சத்துக்கள் குறையும். எனவே அவ்வவ்வுணவு பொருட்களை கவனத்தில் கொண்டு உட்கொள்ள வேண்டும். பொதுவாக பச்சை காரட், பீட்ரூட், வெங்காயம், வெண்டைக்காய், பழங்கள், சாறுகள், முளைத்த தானியங்கள் மற்றும் இஞ்சி, கொத்தமல்லி, புதினா போன்றவற்றையும் உட்கொள்ள வேண்டும்.

**3) தென்இந்தியாவில் சாப்பிடப்படும் அரிசி வகைகள் குறித்து தெரிவிக்கவும்?**

அரிசியை மூன்று வகைப்படுத்தலாம். அவை யாவன:

1) பழுப்பு அரிசி (மெருகேற்றப்படாத அரிசி

2) வேகவைத்த அரிசி

3) அரைக்கப்பட்ட அரிசி (மெருகேற்றப்பட்ட அரிசி)

பார்ப்பதற்கு அழகாக இல்லையென்றாலும் பல சத்துக்கள் நிறைந்திருப்பதால் பழுப்பு அரிசி உடலுக்கு மிகவும் நல்லதாகும். இன்று நிறைய மக்கள் இதன் பயனை அறிந்து வாங்குவதால், இப்போது இது கடைகளில் கிடைக்கின்றது.

நெற்கதிர்களை உப்பு தண்ணீரில் ஊற வைத்து, கொதிக்க வைத்து, உலர்த்தி அரைத்ததே "வேகவைத்த அரிசி" (புழுங்கல் அரிசி) எனப்படுகிறது. அதிலிருந்து வரும் கெட்ட வாசனையால், பலர் அதனை உபயோகிப் பதில்லை. ஆனால் அதில் நிறைய சத்துக்கள் அடங்கியி ருக்கின்றன. சாதாரணமாக அரைக்கப்பட்ட அரிசியே மக்களால் உபயோகிக்கப்படுகிறது. அவை மெருகேற் றப்பட்டிருப்பதால் அழகாக, வெள்ளை நிறத்தில் காணப்படுகின்றன.

**4) மெருகேற்றப்பட்ட அரிசி உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதா?**

சத்துக்கள் நிறைந்த தோல் களைந்து விடுவதால், மெருகேற்றப்பட்ட அரிசியில் கார்போஹைட்ரேட் அதிக அளவில் காணப்படுகிறது. இங்ஙனே இதனை உட் கொள்வதால் சர்க்கரை நோய் உண்டாகக்கூடும். இவ் வரிசி வேகமாக ஜீரணிப்பதால், ஒரு நாளைக்கு இதனை பல முறை உட்கொண்டால், அதனால் உடல் பருமன் அதிகரிக்கிறது.

மேலும் சமைப்பதற்கு முன் அரிசியைப் பலமுறை கழுவி, பின் சமைத்த பிறகு கஞ்சியை வடிக்கட்டுவதால் அரிசியிலுள்ள பல சத்துக்கள் குறைந்து விடுகின்றன.

**5) காய்கறிகள், கீரை வகைகளை சமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்யவை யாது ?**

காய்கறிகளை வெட்டுவதற்கு முன்புதான் அவற்றை நன்கு கழுவ வேண்டும். மேலும் கொதிக்கின்ற நீரில் மட்டுமே அவற்றை சமைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் காய்கறிகளிலுள்ள சத்துக்களை நம்மால் தக்க வைத்து கொள்ள முடியும். சமைக்கும்போது பாத்திரத்தை மூடி வைக்க வைண்டும்.

இல்லையேல் காய்கறிகளிலுள்ள கெரடின் எனும் சத்து ஆவியாகி விடமின் எ குறைந்து விடும். காய்கறி சமைக்கும்போது சோடா உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதனாலும் அவற்றின் சத்துக்கள் குறையும்.

**6)சமைக்கும்போது நெய் உபயோகம் தவிர்ப்பது நல்லது என்பது எந்த அளவுக்கு உண்மை?**

"கடன் வாங்கியேனும் நெய் வாங்கி சாப்பிட வேண்டும்" என்னும் இப்பழஞ்சொல், நெய்யின் மகிமையை நமக்கு உணர்த்துகின்றது.

பழங்காலத்து மக்களின் வாழ்க்கை முறை மற்றும் கடின உழைப்புடைய வேலை இருந்ததால் அவர்களால் நெய் உண்டு ஆரோக்கியமாய் வாழ முடிந்தது. ஆனால் இன்றைய வாழ்க்கை முறையால் தற்போதைய தலைமுறை அதனை தவிர்க்கின்றது.

ஆனால் அதிகமாக உபயோகப்படுத்தாவிட்டாலும் அதனை முழுமையாக தவிர்க்கக்கூடாது. ஏனெனில் நல்ல கொழுப்பு சத்து மிகுந்த உணவுபொருட்களை தவிர்த்தால் மனித தோல் வரண்டு மூட்டு வலி ஏற்பட சாத்தியம் உண்டு.

ஆயுர்வேதம் வளரும்...

### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
## 2019, டிசம்பர் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம், சக்கர ஸ்நானம். |
| 2 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் கந்தசஷ்டி. |
| 9 | சக்கரதீர்த்த முக்கோட்டி. |
| 10 | திருமங்கையாழ்வார் சாத்துமுறை, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம். |
| 11 | கபிலதீர்த்தம் முக்கோட்டி, திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம், திருமலையப்ப ஸ்வாமி ஆலயத் தில் கார்த்திகை தீபோத்ஸவம். |
| 25 | தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திரம். |



ஓம் அனுக்ரஹபராயை நம:



# 2019
# நவம்பர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் | | ராகு |
| நெப்ட்யூன் | **நவம்பர் - 2019**<br>4 – குரு – தனசு<br>7 – புதன்(வ) – துலாம்<br>10 – செவ்வாய் – துலாம்<br>16 – சூரியன் – விருச்சிகம்<br>21 – சுக்ரன் – தனுசு | | |
| | | | |
| சந்திரன் குரு கேது சனி ப்ளூட்டோ | சுக்ரன் (புதன்) | சூரியன் | செவ்வாய் |

**மேஷம்**
ராசிநாயகன் செவ்வாய் ஆறாமிடத்தில் உலவிடுகிறார். ஆறில் செவ்வாய் ஆயிரம் யானைபலம் என்பர். இது வரை இருந்து வந்த குறுக்கீடுகளும் தடைகளும் நீங்கும். ஒன்பதில் குருவும், சந்திரனும் இணைந்துள்ளதால் தந்தை வழி சொத்துக்களைப் பெற வாய்ப்பு கூடி வருகிறது.

**ரிஷபம்**
ராசிநாதன் ஏழில் உலவிடுவது சிறப்பேயாகும். பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மேடைப்பேச்சாளர்கள் போன்றவர்களுக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை நிலவி வரும். நிர்வாகத்துறையைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். செவ்வாய் ஐந்தில் பயணிப்பதால் விற்பனைக் கலையில் சாதனை புரிவீர்கள்.

**மிதுனம்**
ராசிநாதன் புதன் ஆறாம் வீட்டில் வக்ரம் பெற்று உலவிடுகிறார். கடன்கள் இருப்பினும் அவற்றைத் திரும்பச் செலுத்தும் வல்லமை ஏற்படும். பாதுகாப்புப் பணிகளில் உள்ள இந்த ராசி நேயர்களுக்கு பதவி உயர்வு கிட்டும். வேலைத் தேடிக் கொண்டிருப்பவர்களின் எண்ணம் ஈடேறும்.

**கடகம்**
முதலிரண்டு வாரங்களில் சூரியன் நான்கில் நீசமாக உலவிடுவதால் தாயாரின் உடல் நலனில் அக்கறைத் தேவை. வாகன பழுது செலவு அதிகரிக்கும். மாணவர்களின் படிப்பில் கவனச்சிதறல்கள் உருவாகலாம். ஆறாமிடத்தில் உள்ள கிரக கூட்டத்தால் எதிரிகளை வெல்லும் ஆற்றல் அதிகரிக்கும்.

**சிம்மம்**
ராசி நாதன் மூன்றில் உலவிடுவதால் மாத முதல் இரண்டு வாரங்கள் வரை மனதில் துணிவும் செயல் களில் வேகமும் குறையலாம். ஒன்பதிற்குரிய செவ்வாய் இரண்டில் உலாவருவதால் செல்வாக்கும் அதிகரிக்கும். தேர்ந்தெடுத்தத் துறைகள் அனைத்திலும் நல்ல அறிவும், தேர்ச்சியும் உண்டாகும்.

**கன்னி**
தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எடுத்த எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிட்டும். சிறந்த இசையமைப்பாளர் அல்லது பாடகராகும் திறன் வெளிப்படும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்றவற்றின் மூலம் பொருள் சேரும். உங்கள் பேச்சுத்திறன் அனைவரையும் கவர்வதாக இருக்கும்.

**துலாம்**
ராசி நாதன் சுக்ரன் ராசியிலேயே உலவிட மாதம் தொடங்குகிறது. மாத இறுதி வாரத்தில் தன குடும்ப ஸ்தானத்திற்குச் செல்கிறார். பெயரும், புகழும் அதிகரிக்கும். செல்வவளம் கூடும். குடும்பத்தில் திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்வுகள் தொடரும். உயர் பதவி, பட்டங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
இரண்டில் குருவும், ராசி நாதன் செவ்வாய் பதினொன்றிலும் அமர்ந்துள்ளதால் பெரும் பணவரவு உண்டாகும். கலை, இசை போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். மூத்த உடன்பிறப்புகளின் ஆதரவு கிடைக்கும். அரசியல் ஈடுபாடு உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்பும் பதவியும் தேடி வரும்.

**தனுசு**
இரண்டிற்குரிய சனி, பதினொன்றிற்குரிய சுக்ரன் மற்றும் ராசி நாயகன் குரு ஆகியோர் ராசியில் கூடுவது மிகவும் சிறப்பானது. பெரும் பொருள் வரவை எதிர்ப்பார்க்கலாம். வியாபாரம், தொழில் எதுவாயினும் மிகவும் செழிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பெரியவர்கள் பக்க பலமாக இருப்பர்.

**மகரம்**
ராசி நாயகன், விரய வீட்டில் சஞ்சரிப்பினும், யோகத்தை வாரி வழங்கும் சுக்ரன் மாத இறுதி வரை லாபஸ்தானத்தில் உலா வருவதால் பணப்பிரச்சனைகள் ஏற்படாது. அரசு பணியாளர்களது நிலை உயரும். ஒன்பதாம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால் தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்**
ராசி நாயகன் லாபஸ்தானத்தில் அமர அவருடன் சுக்ரன் சேருவதால் இம்மாதம் மிகுந்த நன்மையைத் தரும். பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அலுவலகப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு பெறுவார்கள். வீடு, மனை, வாகனம் போன்றவற்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**மீனம்**
ராசி நாயகன் தொழில் வீட்டில் பிரவேசிக்கிறார். வீடு, நிலம், வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு சுபிட்சம் கூடும். ஏழில் செவ்வாய் உலவிடுவதால் பயணத்தின் போதும், இயந்திரங்களில் பணி புரியும் போதும் பாதுகாப்பு அவசியமாகும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

மாவட்டம் & பின்கோடு எண் _ _ _ _ _ _ _ _ _ _ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஓ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பக்தர்கள் சேவையில்...



திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் 30-09-2019 அன்று "ஸ்ரீநிவாச வேதவித்வத்சபை"யை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். இதில் ஸ்ரீவேங்கடேஸ்வரா வேதப்பல்கலைகழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் கே.இ. தேவநாதன், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி, எஸ்.வி. உயர் சிறப்பு அதிகாரி டாக்டர். ஆகெள்ள விபீஷண சர்மா முதலானோர் பங்கு கொண்டனர்.

தி.தி.தேவஸ்தானம் மலர்கள் காட்சி சாலையை 30-09-2019 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி.சுப்பாரெட்டி அவர்கள் பார்வையிட்டார். அவருடன் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு. டி.பி. அனந்த, தோட்டக்கலை அதிகாரி டாக்டர். ஸ்ரீநிவாசலு முதலானோர் பங்கு கொண்டனர்.





திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு மாடவீதி கேலரியில் உள்ள பக்தர்களுக்கு அன்னப்பிரசாதத்தை வழங்குகின்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்.

திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்திற்கு வந்திருந்த பக்தர்களிடம் தேவஸ்தானம் செய்த ஏற்பாடுகளை குறித்து அறிந்து கொள்ளும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள். அருகில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு.மேடா மல்லிகார்ஜுன ரெட்டி அவர்கள்.





திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் 01-10-2019 ஆம் தேதி அன்று தி.தி.தே. நூல் பதிப்புகளை வெளியிடுகின்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்., தி.தி.தே. நூல் பதிப்பக சிறப்பு அதிகாரி திரு.டி. ஆஞ்சநேயலு மற்றும் ஊழியர்கள்.



02-10-2019 அன்று திருமலையில் நிர்மாணித்த “மாத்ருஶ்ரீ வகுளாதேவி ஓய்வுக்குடிலை” தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் திறந்து வைத்தார். இதில் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள், திருப்பதி இணைச் செயலாட்சித் தலைவர் திரு.பசந்த்குமார் ஐ.ஏ.எஸ்., முதன்மை பொறியாளர் திரு.ராமச்சந்திராரெட்டி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.டி. ரவி முதலானோர் பங்கு கொண்டனர்.



திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு 07-10-2019 அன்று திருமலையப்ப ஸ்வாமியின் குதிரை வாகன சேவையில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர் திரு. டி.பி. அனந்த அவர்கள், தி.தி.தே. முதன்மை அர்ச்சகர் திரு.வேணுகோபல் தீக்ஷிதர் முதலானோர்.



தி.தி.தே. ஶ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனலில் நடை பெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகின்ற தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் திருப்பதி இணைச் செயலாட்சித் தலைவர் திரு.பசந்த் குமார் ஐ.ஏ.எஸ். அவர்கள், எஸ்.வி. பி.சி. தலைவர் மற்றும் இயக்குனர் திரு. பாலிரெட்டி ப்ருத்விராஜ் அவர்கள், எஸ்.வி.பி.சி. சி.இ.ஓ. திரு. வேங்கட நகேஷ் முதலானோர் பங்கு கொண்டனர்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Dr. K. Radha Ramana,*** *M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. R.V. Vijayakumar,*** *B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்
# பொறுப்பாண்மைக்குழு



திருமலை திருப்பதி தேவஸ்தான புதிய பொறுப்பாண்மைக்குழுவிற்கு ஆ.மா. அரசு தலைவர், உறுப்பினர்கள், பதவி அடிப்படையில் உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களை நியமித்தது. இவர்களுக்கு திருமலை ஆலயத்தில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர், இணைச்செயலாட்சித்தலைவர், உயர் அதிகாரிகள் பதவிப்பிரமாணம் செய்வித்து ஸ்வாமி தீர்த்தப்பிரசாதங்களை வழங்கினர். வேதபண்டிதர்கள் ஆசிர்வதித்தனர்.



திரு. சிப்பகிரி வேங்கடபிரசாத்குமார்
உறுப்பினர்



திரு. எம்.எஸ். சிவசங்கரன்
உறுப்பினர்



திரு. சம்பத் ரவிநாராயணன்
உறுப்பினர்



திருமதி சுதாநாராயணமூர்த்தி
உறுப்பினர்



திரு. ஆர். குமரகுரு
உறுப்பினர்



திரு. புட்டா பிரதாப் ரெட்டி
உறுப்பினர்



திரு. கே. சிவகுமார்
உறுப்பினர்



டாக்டர் மன்மோகன் சிங், ஐ.ஏ.எஸ்.,
ஆ.மா. சிறப்பு தலைமைச்செயலாளர்
(வருவாய்&அறநிலையத்துறை)
பதவி அடிப்படையில் உறுப்பினர்



டாக்டர். எம். பத்மா, ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், ஆ.மா.அறநிலையத்துறை
பதவி அடிப்படையில் உறுப்பினர்



டாக்டர் செவிரெட்டி பாஸ்கர்ரெட்டி
திருப்பதி துடா தலைவர்,
பதவி அடிப்படையில் உறுப்பினர்



திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
தி.தி.தே. செயலாட்சித்தலைவர்,
பதவி அடிப்படையில் உறுப்பினர்



திரு. பூமன கருணாகர ரெட்டி
சிறப்பு உறுப்பினர்




திரு. ராகேஷ் சின்ஹா
சிறப்பு உறுப்பினர்



திரு. ஏ.ஜெ. சேகர்
சிறப்பு உறுப்பினர்



திரு. குபேந்த்ர ரெட்டி
சிறப்பு உறுப்பினர்



திரு. கோவிந்தஹரி
சிறப்பு உறுப்பினர்



திரு. துஷ்மந்த் குமார் தாஸ்
சிறப்பு உறுப்பினர்



திரு. அமொல் காலே
சிறப்பு உறுப்பினர்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printed on 25-10-2019. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

